Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது மார்கழி 26 ஆம் நாள் ஷஃபான் பிறை 13 (10-1 63) வியாழக்கிழமை தபாற் பெட்டி எண் 49 இதழ் 331

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழபபாணம்.

# வெள்ள அபாயம் பல

## பகுதிகளில் குறைந்தது

### காலநிலையும் சீரடைகிறது

### கண்டி - யாழ்ப்பாணம் ரஸ்தாவில் ஓரிடத்தில் மட்டும் துண்டிப்பு

கொழும்பு, புதன்

நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அபாயம் இப்போது படிப்படியாகச் சீரடைந்துவருவதுடன் காலநிலையம் சீராகிவருவதாக அறிவிக்கப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல ரோட்டுக்களில் வெள்ளம் வடிந்திருக்கிறது.

கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் 165ம் கட்டையில மட்டும், ரஸ்தா போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளத்தின் காரணமாக இதுவரை அநுராதபுரத்தில் 15 குடும்பங்களும் மற்றோரிடத்தில் 20 குடும்பங்களும் வெளியேற்றப்பட்டிருக்கின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் மாத்தளையில் 1.86 அங்குல மழை பெய்தது. இதர இடங்களில் அதற்குக் குறைவாகவே மழை பெய்தது.

## ‘சீனு, தொடர்ந்து உலகுக்கு ஒரு பிரச்னையாக இருக்கும்’

–திரு. சென்

## ‘இமயமலை இனியும் பாதுகாப்பு அரண் அல்ல’

–ஸ்ரீமதி மேனன்

கல்கத்தா, ஜன. 9

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து தொடர்ந்து ஆயுத உதவி பெறுவது பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கல்கத்தாவில் கூறினார்.

சென்னை, பூனா ஆகிய இடங்களில் ராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்க 2 நிலையங்கள் திறக்கப்படவிருப்பதாயும் அவர் கூறினர்.

“சீனவை ராணுவமுறையில் சமாளிக்க வேண்டியிருக்கிறது” என சட்ட மந்திரி திரு. ஏ. கே. சென் கூறியுள்ளார். திபேத்தில் சீனர்கள் தங்கள் படைகளைக் குவிக்கிறார்கள். பிரதேச விஸ்தரிப்பு நோக்கத்துக்காகவே இவ்வாறு நடைபெறுகிறது. சீன, ஆசியாவுக்கும் உலகுக்கும் தொடர்ந்து ஒரு பிரச்னையாக இருக்கும் இந்திய-சீன எல்லைப் பிரச்னையை உலக நீதிமன்றத்துக்குக் கொண்டுபோக வேண்டுமென்று இந்தியா தெரிவித்த யோசனைபற்றி சீன இன்னும் மௌனமாகவே இருக்கிறது என்றும் திரு. சென் கூறினர்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு இமயமலையை ஒரு அரணாக இனிக்கருதமுடியாதுஎன்பதை சீனத் தாக்குதல் நிரூபித்துவிட்டது என வெளிவவகார ராஜாங்க உதவிமந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன கூறியிருக்கிறார்.

தேசீயப் பாதுகாப்பு நிதிக்கு இதுவரை மைசூரில் 170லட்சம் ரூபாயும் கேரளத்தில் 110லட்சம் ரூபாயும் ஆந்திர பிரதேசத்தில் 1,11,17,000ரூபாயும் சேர்ந்திருக்கிறது.

## மிக் விமானங்கள் இந்தியா வருகின்றன

புதுடில்லி, ஜன. 9

ரஷ்யாவிலிருந்து எம். ஐ. ஜி. விமானங்கள் இப்போது இந்தியா வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. முதலில் 4 விமானங்கள் வருமென்றும் இவ் விமானங்களைச் செலுத்த ரஷ்யாவில் பயிற்சி பெற்ற பாரத விமானிகள் இந்தியா திரும்பியிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது. மிக்விமானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஒரிஸா, மகா ரஷ்டிரம் ஆகிய ராஜ்யங்களில் அமைப்பதிலும் ரஷ்யா உதவி செய்யும்.

## கடைசியோசனையும் நிராகரிப்பு

புதுடில்லி, ஜன. 9

இந்தியா-சீன எல்லை நெடுகிலும், தற்போது இந்தியத் துருப்புக்கள் தங்கியுள்ள இடத்திலேயே இருக்கவேண்டும் என்றும், அதே சமயம் இரு நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்றும் சீன கடைசியாகத் தெரிவித்த யோசனையை திரு. நேரு நிராகரித்துவிட்டார் சீனவின் 3 அம்ச யோசனையை விட இது மோசமானது என சீனப் பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதம் இன்று புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

## “நஷ்ட ஈடு வழங்குவோம்”

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள அமெரிக்க எண்ணெக் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும் என நிதி மந்திரி இன்று அறிவித்தார். “கல்டெக்ஸ்”, “எஸ்ஸோ”, “ஷெல்” ஆகிய கம்பெனிகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்காவிடில், சகல அமெரிக்க உதவிகளும் நிறுத்தப்படும் என அமெரிக்கா அறிவித்திருந்தது.

## தமிழ் நாட்டில் கடும் மழை

சென்னை, ஜன. 9

மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி உட்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்திருக்கிறது.

## ஷோம்பே மனமாற்றம்!

எலிஸபெத்வில்லி, ஜன. 9

எலிஸபெத் வில்லிக்குத் திரும்பியிருக்கும் ஷோம்பே, தாம் கடாங்காவில் யுதாண்ட் திட்டத்தை நிறைவேற்றி வைக்கப்போதாயும், இதன் மூலம் கடாங்காவில் அழிவைத் தவிர்க்கப்போவதாயும் அறிவித்திருக்கிறார். இனி தாம் ஐ. நா. வுக்கு எதிராக அறிக்கைவிடுக்கப்போவதில்லை என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

## நீதிபரிபாலனசபை உத்தியோகஸ்தர் நியமனத்தில்

### மந்திரிகளுக்கு அதிகாரம்

கொழும்பு, புதன்

சட்டரீதியான சபைகள், விசாரணை மன்றங்கள், தொழிற் கோர்டுகள் ஆகியவற்

(5-ம் பக்கம் பார்க்க)

## டாலர் நோட்டுக்களை கடத்த முயன்றனர்

### ஆனல் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்

அமெரிக்க டாலர் நோட்டுகளையும் இந்திய ரூபா நோட்டுகளையும் இரு அமெரிக்கரும், ஒரு இந்தியரும் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல முயன்றதை காங்கேசன் துறை சுங்க இலாகா அதிகாரிகளான திரு. ஏ. பரஞ்சோதி, திரு. எம். கே. அனுவரத்தின ஆகியோர் கண்டுபிடித்து, அந்த நோட்டுகளைக் கைப்பற்றினர்.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஓர் உல்லாசப் பிரயாணி 2,000 ரூபா பெறுமதியான இந்திய கரன்சி நோட்டுக்களை இலங்கையிலிருந்து இந்தியாவிற்குக் கடத்திச் செல்ல முயன்றபோது சுங்க இலாகா அதிகாரிகள் கண்ணில் சிக்கினர். இது சம்பந்தமாக வடபகுதி சுங்க இலாகா சேகரிப்பாளர் திரு. கே. திருநாவுக்கரசு விசாரணை நடத்தியபின் ‘பணத்தைக் கடத்திச்’ செல்ல முயறன்வருக்கு 4,800 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், கடத்திச் செல்ல முயன்ற பணமும் கைப்பற்றப்பட்டது.

37 அமெரிக்க டாலர் பண நோட்டுக்களை சென்னைக்குக் கடத்திச் செல்ல முயன்ற அமெரிக்கப் பெண்மணி ஒருவர் தமது பணத்தை இழந்துவிட்டதுடன் 480 ரூபா அபராதமாகச் சுங்க இலாகாவுக்குச் செலுத்தினர்.

275 ரூபா பெறுமதியான இந்திய கரன்சி நோட்டுக்களை பலாலியிலிருந்து இந்தியாவுக்குக்கடத்திச்செல்லமுயன்ற ஒரு நபரிடமிருந்து அந்த நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தான விசாரணை நடைபெறுகிறது.

700 ரூபா பெறுமதியான ஒரு வானெலிப் பெட்டியையும், 75 ரூபா பெறுமதியான இலங்கை பண நோட்டுகளையும் கடத்திச் செல்ல முயன்ற பிரயாணி ஒருவரை சுங்க அதிகாரி கண்டுபிடித்து பொருள்களைக் கைப்பற்றினர். விசாரணை நடைபெறுகிறது.

உத்தரவில்லாமல் பலாலி விமான நிலையத்தில் இருந்து 64 ரூபா இலங்கை நோட்டுக்களைக் கடத்திச் செல்ல முயன்ற மாணவர் ஒருவரையும் திரு பரஞ்சோதி கண்டுபிடித்து அவரிடமிருந்த சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்படும் பணத்தையும் கைப்பற்றினர். இதுசம்பந்தமான விசாரணையும் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

## இந்தியா வரும் காந்தி சீடர்

புதுடில்லி, ஜன. 9

தென்னபிரிக்காவில் மகாத்மா காந்தி நிறுவிய போனிக்ஸ் பண்ணையில் குடியேறியவர்களில் ஒருவரான திரு. ஆல்பர்ட் பி. வெஸ்ட் அடுத்த சனிக்கிழமை புதுடில்லி வருகிறார். இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் மீது வரும் அவர் 6 வாரம் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார் காந்திஜீயின் ஏஜெண்ட் என்ற முறையில் அவருக்கு காந்திஜீ எழுதிய கடிதங்களும், பத்திரங்களும் குறிப்புக்களும் அவரிடம் ஏராளமாக இருக்கின்றன இவற்றை அவர் இந்தியாவுக்கு அன்பளிப்பு செய்ய உத்தேசித்திருக்கிறார்.

## களனியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்

கொழும்பு, புதன்

இன்று துருது பூரணை தினத்தை முன்னிட்டு களனி பௌத்த ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் விஜயம் செய்தனர். துருது பூரணை தினத்தில்தான் கௌதம புத்தர் களனிக்கு விஜயம் செய்ததாகக் கூறப்படுகிறது. மஹியங்கனையிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். கொழும்பிலுள்ள பல பௌத்த ஆலயங்களிலும் மக்கள் பிரார்த்தனை செய்ததுடன் அஷ்டசீலமும் அனுஷ்டித்தனர். வெளிக்கடை சிறையில் இரவு முழுதும் பிரித்ஓதப்பட்டது. பிக்குகளுக்குத் தானம் வழங்கப்பட்டது

## நேரு படம் ரூ. 6000 ஏலம்

கங்காநகர், ஜன. 9

நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பேசிய கூட்டத்தில் நேரு படம் ஒன்று ஏலம் போடப்பட்டது. அதில் கிடைத்த ரூ. 6,000 தேசபாதுகாப்புநிதிக்கு அளிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி

# 6%

உறுதியான இடம்

**சிலோன் றிசேவ்**
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

### மனேஜர் தேவை

பாலமோட்டை ஐக்கிய விவசாயப் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்துக்கு மனேஜர் ஒருவர் தேவை.

கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்:

30 வயதுக்கு மேற்பட்டவர்களே விண்ணப்பிக்கவேண்டும். எஸ். எஸ். ஸி. (ஆங்கிலம்) தமிழை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருக்கவேண்டும். (கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்சி பெற்றிருத்தல் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்).

ரூ 150/ — 10 — உட்பட எல்லாமாக 250 ரூபா சம்பளம் வழங்கப்படும்.

ரூ. 1000 பிணைப்பணமாகவும் ரூ. 2000 பெறுமதியான ஆதனப் பிணைப்பணமாகவும் தரப்படவேண்டும்

தேர்ந்தெடுக்கப்படுபவர் ஓமந்தையிலுள்ள நாவியில் சங்கக்காரியாலயத்தில் கடமையாற்றச் சித்தமாயிருக்கவேண்டும்.

சமீபத்திய இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் சங்கக் காரியதரிசிக்கு மனுச்செய்ய வேண்டும்.

காரியதரிசி

1/36, பெரேரா லேன்,
கொழும்பு 6.

### வீடு வாடகைக்கு

இந்துக் கல்லூரிக்கும் மகளிர் கல்லூரிக்குமிடையில் நீராவியடியில், ஏழு அறை, கராச், மின்சாரம், குழாய்த் தண்ணீர் மற்றும் வசதிகளுடன். கல்லூரி வீதி, 38-ல் விசாரிக்கவும்.

638

### விற்பனைக்கு

ஆனைக்கோட்டையில் 3-ம் கட்டைக்கு அருகாமையில் 14 பரப்புள்ள வீடும் வளவும் விற்பனைக்கு இருக்கிறது. ஒருமித்தும் தனித்தும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு:

ஜெகதீஸ்வரன்,
639 ஆனைக்கோட்டை.

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்தர்,
கைலாயபிள்ளையார்கோவிலடி.
யாழ்ப்பாணம்.


## போலந்துடன் வர்த்தக ஒப்பந்தம்

பொன், ஜன. 9

போலந்துடன் மேற்கு ஜெர்மன் வர்தக ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப் படவிருப்பதாக வெளிவந்த செய்தியை அரசாங்கம் மறுக்கவோ ஊர்ஜிதம்செய்யவோ மறுத்துவிட்டது.

## வேலைநிறுத்த எச்சரிக்கை கைவிடப்பட்டது

### இ. போ. ச. நிர்வாகம் 9 கோரிக்கைகளை நிராகரித்தது

கொழும்பு, புதன்

வெரகரையிலுள்ள இ. போ. ச. தொழிற்சாலையைச் சேர்ந்த 1,200 தொழிலாளர்கள் இன்று காலை வேலைநிறுத்தம் செய்யப்போவதாக எச்சரித்திருந்தனர். ஆனால் இ. போ. ச. வின் வாக்குறுதியைத் தொடர்ந்து அவர்கள் கடைசி நேரத்தில் வேலைநிறுத்தம் எதையும் செய்வதில்லை என முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க வெரகரை கிளைத் தலைவர் திரு ஏ. ஜெயசேனவை தற்காலிகமாகவேலைநீக்கம் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டதன் பேரிலேயே, தொழிலாளர்கள் தாம் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக எச்சரித்திருந்தனர். ஆனால் பின்பு திரு ஜெயசேனவின் அவசியமற்ற வேலை பற்றி ஒரு விசாரணை நடத்தப்படுமெனவும், திரு. ஜெயசேன தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்படமாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

6,000 ரூபா பெறுமதியான உதிரிப் பாகங்களை திருடிச் செல்ல முற்பட்ட சிலர் பிடிபட்டவைதத் திரு. ஜெயசேன தொலைபேசிமூலம் பாதுகாப்புச் சேவைக்கு அறிவித்திருந்ததாக தெரியவருகிறது. அது பற்றி அறிவிக்கப்பட்டது அவருடைய கடமைக்குப் புறம்பானது என இ. போ. ச. நிர்வாகம் கருதியதைத் தொடர்ந்தே அவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டது.

இ. போ. ச.வைச் சேர்ந்த மூன்று தொழிற் சங்கங்களின் ஒன்பது கோரிக்கைகளையும் இ. போ. ச. நிராகரித்துவிட்டது. இ. போ. ச. விற்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது தமது கோரிக்கைகளை பிரதிநிதிகள் தெரிவித்தனர். ஆனால் அக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு இ. போ. ச. நிர்வாகம் மறுத்துவிட்டது.

மதுவிலக்கில்

## கைத்தொழில் கலாச்சார மந்திரியின் கஷ்டம்

### தேரோ நிலைமையை விளக்குகிறார்

கட்டுநாயக்கா, புதன்

"கலாச்சார, கைத்தொழில் மந்திரியுடன் நான் பேச்சுவார்த்தைகள் நடத்தினேன். கலாச்சார மந்திரி என்ற சோதாவில் அவர் மதுவிலக்கிற்கு ஆதரவு அளிக்க வேண்டிய அதே நிலையில் கைத்தொழில் மந்திரி என்ற சோதாவில் மதுபான உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆதரவளிக்கவேண்டியுள்ளது. இதனால் அவர் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்குகிறார்."

இவ்வாறு, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கூட்டமொன்றில்பேசிய பன்னசேகர மகா நாயக்கதேரோ குறிப்பிட்டார்.

பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. லலிதா ராஜபக்சாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. யு. டி.' சில்வா பேசியதாவது:

போதனை மூலம் தான் மக்களை குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கலாமே தவிர மதுவிலக்கினால் அவர்களை அப் பழக்கத்திலிருந்து விடுவிக்க முடியாது எனப் பல எம். பி. க்கள் கருதுகின்றனர் என்று அவர்களுடன் பேசியதிலிருந்து தெரிய வருகிறது. பல எம். பிக்களே குடிப்பழக்கமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள், எனவே அரசாங்கத்தினால் குடிபழக்கத்தை ஒழித்துவிட முடியும் என்று நான் நம்பவில்லை. பௌத்த காங்கிரஸ் மதுவிலக்குப் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் எவ்வித பலனுமில்லை. அதற்கான வழிவகைகளை கையாள வேண்டும்.

கசிப்பை மட்டுமல்லாது எல்லா போதையூட்டும் குடிவகைகள் தயாரிப்பதையும் தடைசெய்ய வேண்டும்.

கல்லோயாச் சபை பௌத்த சபைக் காரியதரிசி பேசும்பொழுது சரித்திர பிரசித்த வாய்ந்த பௌத்த ஆலயங்களை பௌத்தரல்லாதர் அழிக்கும் பொழுது காங்கிரஸ் வளாதிருக்கக் கூடாதென்றும், குடியேற்றத் திட்டங்களில் பௌத்தர்களுக்கு அநீதி செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

## பெண்களுக்கு தனி ஒரு கல்விக் கழகம்

கொழும்பு, புதன்

பெண்களுக்குத் தனியானதொரு சர்வகலாசாலை நிறுவப்பட வேண்டுமென வித்தியாலங்கார சர்வகலாசாலை பட்டதாரி மாணவர் யூனியன் கோரியுள்ளது.

மோசியஸ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, விசாக வித்தியாலயம் இரண்டிலொன்றை தரப்படுத்தி புதிய வித்தியோதய, வித்தியாலங்கார சர்வகலாசாலைகள் இரண்டோடும் அதனை இணைத்து மகளிர் பல்கலைக் கழகத்தை தோற்றுவிக்கலாம் என்று யூனியன் யோசனை தெரிவித்துள்ளது.

யூனியன் அதன் சமீபத்திய கூட்டமொன்றில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வித்தியோதய, வித்தியலங்கார சர்வகலாசாலைகளில் பெண்களையும் அனுமதிக்க வேண்டும் அல்லது இவர்களுக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டும் என பல்கலைக் கழக விசாரணை சபையிடம் கேட்டிருக்கிறது.

பழைய காலம் முதலாக பிரிவேன கல்விக் கழகங்களில் பெண்கள் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட்டு வந்ததில்லையானாலும் இன்றைய காலப் போக்கை அனுசரித்து தேசத்துக்கு படித்த பெண்களின் செவை தேவையாயிருப்பதைக் கருதி அவர்களுக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவது பொருத்தமானதே என வித்தியாலங்கார சர்வகலாசாலை வட்டாரத்தில் பொதுவானதொரு அபிப்பிராயம் இருந்து வருகிறது.

## பருத்தித்துறைகல்லூரி மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், வியாழன்

சுழற்காற்றினால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர மகளிர் கல்லூரி இம்மாதம் முழுவதற்கும் மூடியிருக்கும். இக் கல்லூரி கட்டடங்களின் பெரும்பகுதி சேதத்திற்குள்ளானது ஞாபகமிருக்கலாம். இக் கல்லூரி மீண்டும் பெப்ரவரி மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

இதேபோல பாதிக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் நேற்று மூடப்பட்டது. ஆனால் இம்மாதம் 21-ம் திகதி இக்கல்லூரி மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இக்கல்லூரிகளை மூடி, புனருத்தாரணவேலையைமுடித்துக் கொண்டு ஆரம்பிக்க உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் உத்தரவிட்டிருக்கிறாரெனத் தெரிகிறது. இந்தக் கல்லூரிகளைப் புனருத்தரணம்செய்வதற்கான செலவுத் தொகையையும் நஷ்டத் தொகை கொண்ட விபரங்களையும் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. இதுபற்றி திரு. சோமசேகரம் வித்தியாதிபதிக்கு இன்று நேரில் எடுத்துக் கூறுவாரெனத் தெரிகிறது. இதற்காக அவர் நேற்று கொழும்புக்குப் பிரயாணமானார்.

கியூபா

## பாதுகாப்புச் சபை விவாதிக்காது?

நியுயோர்க், ஜன. 9

கியூபா நெருக்கடி சம்பந்தமாக தங்களுக்குள் சமரச முடிவு ஏற்பட்டுவிட்டதால் கியூபா நெருக்கடி பற்றி ஐ. நா. பாதுகாப்புச்சபை விவாதிக்கவேண்டிய அவசியமில்லாது போய்விட்டதென்று ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டுக்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் தெரிவுத்துள்ளன.

ஆனால் கியூபா தலைமைக் காரியதரிசிக்கு தனியாக எழுதிய ஒரு கடிதத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கியூபா சம்பந்தமாக கொண்டுள்ள உடன்பாடு கியூபா ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லையென்றும் அந்த உடன்பாடு ஒக்டோபர் 28-ந் திகதி கியூபா பிரதமர் பிடல்காஸ்டிரோ விடுத்த ஐந்து கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வில்லையென்றும் கியூபா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

## கெயிட்ஸ்கல் சுகவீனம்

### தொழிற்கட்சியை பாதித்தது

லண்டன், ஜன. 8

பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு ஹியூகெயிட்ஸ்கலின் சுகவீனம் கட்சியின் வருங்காலத் திட்டங்களை வெகுவாகப் பாதித்துள்ளதாக கட்சியினர் கருதுகின்றனர்.

கெயிட்ஸ்கல் இருதய நோயால் பிடிக்கப்பட்டுள்ளார். அவர் நோய்வாய்ப்பட்டதனால் மாஸ்கோவுக்கு விஜயம் செய்து திரு குருஷ்சேவை சந்திக்க விருந்த திட்டம் கைவிடப்பட்டது. அவருடைய உடல் நிலையில் அபிவிருத்தி காணப்பட்டுள்ளதாக வைத்திய அறிக்கை தெரிவித்தபோதிலும் அவர் பூரண குணமடைவதற்கு சிறிது காலமாகலாம் எனக் கருதப்படுகிறது.


**1963** ஈழநாடு தினக்குறிப்பு

**2** வகை அமைப்பில்

## விற்பனையாகின்றது!

1. தினக்குறிப்பு
2. மாணவர் தினக்குறிப்பு

**சிறப்பு அம்சங்கள் இம்முறை சேர்க்கப்பட்டுள்ளன**

★ தினக்குறிப்பு: அரசாங்க, பொது தகவல்கள் உட்பட ஏனைய பல அம்சங்களும் கொண்டது. இத் தினக்குறிப்பில் விளம்பரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

— விலை ரூபா 1-00

★★ மாணவர் தினக்குறிப்பு: கண்ணையும், கருத்தையும் கவரும்வகையில் பலவர்ண அட்டையுடனமைந்துள்ளது. மாணவர்களுக்கு உபயோகமான சகல தகவல்களையும் கொண்டது, நூல் இடப் பெற்றது.

— விலை ரூபா 1-25

மாணவர் தினக்குறிப்பு
மீண்டும் விற்பனையாகின்றது.

தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

# பிரதமர் சிறிமா புதுடில்லி புறப்பட்டார்

## உலகசரித்திரத்தில் 'சிறிமா' பொன்னெழுத்தில் இடம்பெறுமாம்

## தி. மு. க. தலைவருடன் காமராஜ் பேசவேண்டுமென ம. பொ. சி. யோசனை

ஹாங்காங், ஜன. 9

இந்திய-சீன எல்லைத் தகராறுக்குச் சமரசத் தீர்வு காண்பதற்காக கொழும்பில்கூடிய ஆறு ஆசிய-ஆபிரிக்க நடுநிலைமை நாடுகள் தீர்மானித்த யோசனைகள்மீது சீனப்பிரதமர் சூ-என்-லாயுடன் இதர சீனத்தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இன்று ஹாங்காங்கிலிருந்து புதுடில்லிக்குப் பிரயாணமானார். நாளை வியாழக்கிழமை இரவு அவர் புதுடில்லி வந்து சேருவார். வெள்ளிக்கிழமை பிரதமர் நேருவைச் சந்தித்து கொழும்பு மகாநாட்டு யோசனைகள்பற்றி விளக்கம் தெரிவிப்பார்.

### சரித்திரத்தில் சிறிமாவின் பெயர்

காண்டனிலிருந்து இலங்கைப பிரதமர் புறப்படுமுன் அங்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றில் அவர் பேசுகையில் சீனத்தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் சிநேகபாபவத்துடனிருந்ததாகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும் கூறினர். தாம் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சீனுவிலிருந்து புதுடில்லிக்குச் செல்வதாக திருமதி பண்டாரநாயக்கா கூறினா. சீன உதவிப் பிரதமரும் வெளிவிவகார மந்திரியுமான மார்ஷல் சென்யீ பேசுகையில், இலங்கைப் பிரதமரின் சீன விஜயம் இந்தவருடத்தின் நல்ல சகுனம் என்றார். கொழும்பு மகாநாட்டின் நல்லநோக்கத்தையும் அவர் பாராட்டினர். "கொழும்பு மகாநாட்டின் பயன் எப்படியிருந்தாலும் கொழும்பு மகாநாட்டின் பெயரும் அந்த மகாநாட்டைக் கூட்டிய இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் பெயரும் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்படும்" என்று மார்ஷல் சென்யீ கூறினர்.

### கானு நீதிமந்திரி டில்லி செல்வார்

கொழும்பு மகாநாட்டு யோசனைகள்பற்றி இந்தியப்பிரதமர் நேருவுடன் இலங்கைப்பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவருக்கு உதவியாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக கானு நீதிமந்திரி திரு. அட்டாவின் தலைமையில் மூவர் குழுவொன்று வியாழக்கிழமை புதுடில்லி போய்ச் சேரும். ஐக்கியஅரபுக் குடியரசுப் பிரதமர் விங் கமாண்டர் அலிசாப்ரி சனிக்கிழமையன்று புதுடில்லி போய்ச்சேருவார்.

### 'ஆயத்தமாக இருக்க வேண்டும்'

மேற்கு வங்காளத்தில் இந்திய போர் வீரர்களைச் சந்தித்த இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நாட்டின் ஒற்றுமைக்கு போர்வீரர்கள் ஓர் எடுத்துக்காட்டு என்று கூறினர். "சீனர்கள் மீண்டும் தாக்காமல் இருக்கலாம். ஆனாலும் அவர்கள் தாக்குவார்கள என்ற எண்ணத்தில் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்" என்று திரு. சாவன் கூறினர். இதன்பின்னர் கல்கத்தாவில் பாதுகாப்பு சாதன உற்பத்தித் தொழிற்சாலையொன்றுக்குச் சென்று பார்வையிட்ட திரு. சாவன் நாட்டைக் காக்க எல்லையில் பணிபுரியும் போர்வீரர்களுக்குச் சமம் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் உழைப்பு என்று திரு. சாவன் கூறினா.

### சில பதவிகள் ஒதுக்கப்படும்

போர் சேவையிலுள்ளவர்களுக்கென சிலபதவிகளை ராஜ்ய அரசாங்கங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் ஒதுக்குவதுபற்றி மத்திய அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. இதுசம்பந்தமாக ராஜ்ய அரசாங்கங்களுடன் மத்திய அரசாங்கம் கலந்தாலோசனை செய்யும்.

### வீரர்களின் குடும்பங்களுக்கு நிலம்

இந்திய — சீன எல்லைச்சண்டையில் மாண்டுபோன அல்லது காயமடைந்த வீரர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தாலும் அவர்களுக்கென ஒரு லட்சம் ஏக்கர் நிலம் ஒதுக்குவதென மத்தியபிரதேச அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### அஸ்ஸாமில் கிராமத் தொண்டர் படை

அஸ்ஸாமில் தொழிலாளர் வங்கியும் கிராமத் தொண்டர் படையும் அமைக்கப்படவிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் தொழிலாளர் வங்கியும் கிராமத் தொண்டர் படையும் குடியரசுத் தினத்தில் அமைக்கப்படும்.

### திபேத்தையும் விடுவிக்கவேண்டும்

திபேத்தில் சீன ஆதிக்கம் ஒழிந்து தலாய்லாமாவின் ஆட்சி மீண்டும் அங்கு ஏற்படாதவரையில் இந்தியாவுக்கு எப்போதும் அபாயம் இருந்துவரும் என்று அகில இந்திய பாரதீய ஜனசங்கக் காரியதரிசி ஸ்ரீ ஜகந்நாதராவ் ஜோஷி கூறினர்.

### பிரிவினை இயக்கத் தடை

தற்காப்பு முயற்சிக்கு ஆதரவளித்து ஒத்துழைப்பதற்காக தி.மு.க.வின் பிரிவினைக் கோரிக்கை ஏற்கப்படமாட்டாது என்றும், கட்சி நடவடிக்கைகளை தி. மு. க. நிறுத்திவைத்ததன காரணமாகப் பிரிவினை இயக்கங்களைத் தடைசெய்வதென்ற உத்தேசம் கொண்டுவரப்படவில்லையென்றும், பகைவனிடமிருந்து இந்தியா காப்பாற்றப்படவேண்டுமென்று கூறுவதற்கும் தனிநாடு வேண்டும் என்று கோருவதற்கும் இடையே உள்ள முரண்பாட்டை தி. மு. க. உணர்ந்ததாகத் தெரியவில்லையென்றும் தமிழ் நாடு நிதிமந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

### ம. பொ. சி. கோரிக்கை

பிரிவினைக் கோரிக்கையைத் தடை செய்ய சட்டபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமுன்பு பிரிவினைக் கோரிக்கைக்குத் தீர்வுகாணுமுகமாக தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணுதுரையுடன் பேச்சு நடத்துமாறு தமிழ் நாடு முதன் மந்திரி திரு. காமராஜரை தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் கேட்டுக்கொண்டார். பிரிவினை இயக்கங்களைத் தடைசெய்யும் நடவடிக்கை அவசரமானதும் தற்போதைய சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமற்றதுமாகுமென்றும் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

### 'தர்ம யுத்தம்'பற்றி அண்ணுதுரை

கம்யூனிஸ்ட் சீனர்களுக்கு எதிராக தர்மயுத்தத்தை த்தொடர்ந்து நடத்துமாறு திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணுதுரை கழகத் தொண்டர்களை கேட்டுக்கொண்டார். தர்மயுத்தமானது தம்கட்சிமீது மற்றவர்கள் தெரிவிக்கும் கண்டனங்கள், குறைகளைப் பொருட்படுத்தாமலும் நாட்டின் மதிப்பைக் காப்பாற்றுவதற்கான தங்கள் முயற்சிகளுக்குப் பாராட்டு வார்த்தை அல்லது நன்றியை எதிர்பாக்காமலும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருமகத்தான பணியாகும் என்று திரு. அண்ணுதுரை கூறினர்.

## ஷோம்பே தலைநகர் திரும்பினர்

எலிஸபெத்வில்லி, ஜன. 9

கடாங்கா அதிபர் ஷோம்பே நேற்று எலிஸபெத்வில்லிக்குத் திரும்பினர். கடாங்காவில் அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தாம் திரும்பி வந்ததாக ஷோம்பே கூறினர்.

ஷோம்பேயின் அரண்மனையைக் காவல்புரிந்துவந்த ஐ. நா. துருப்புகள் அரண்மனையைவிட்டு வெளியேறிவிட்டனர்.

ஷோம்பேயை காங்கோ பிரதமர் திரு. அடௌலா கைது செய்யவேண்டுமென்று ஷோம்பேயின் மாமனர் உட்பட பழங்குடித் தலைவர்கள் கையொப்பமிட்டு ஐ. நா. தலைமைக் காரியாலயத்திற்கு எழுதிய கடிதம் நியுயோர்க்கில் நேற்று வெளியிடப்பட்டது!

கடாங்காவுக்குச் சென்றிருந்த ஐ. நா. உதவித்தலைமைக் காரியதரிசி டாக்டர் ரால்வ் பஞ்ச் நேற்று லியப்போல்ட்வில்லிக்குத் திரும்பிவந்துசேர்ந்தார். ஷோம்பேயுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதுவுமில்லையென்றும் கடாங்காவை காங்கோவுடன் இணைக்கும் திட்டம்சம்பந்தமாக சில நுட்ப விஷயங்களில் ஷோம்பே ஒத்துழைக்கவேண்டியுள்ளதென்றும் அவர் கூறினர்.

ஐ. நா. படைகளை எதிர்த்து கொல்ரிலா யுத்தம் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்த பின்னரே திரு. ஷோம்பே எலிஸபெத்வில்லிக்குத் திரும்பி வந்து சேர்ந்திருக்கிறரெனக் கருதப்படுகிறது.

## நாட்டின்ஏற்றுமதியில் அதிகரிப்பு

### விரைவில்மேலும் அதிகரிக்கலாம்

கொழும்பு, புதன்

உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு இப்பொழுது ஆதரவு கிடைத்துள்ளன. இங்கு உருவாகும் பொருள்களுக்கு வெளிநாட்டு ஏற்றுமதி அதிகரித்துள்ளன. அத்துடன் மிக விரைவில் பத்து அல்லது பதினைந்து உள்நாட்டுக் கைத்தொழில்கள் பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு தமது உற்பத்தியைப் பெருக்கும்; கைத்தொழில் இலாகாவால் அண்மையில் செய்யப்பட்ட கணக்கெடுப்பின்போது மேற்கண்டவைகள் தெரிந்துகொள்ளப்பட்டன.

வெளிநாட்டுச் செலாவணியைக் குறைப்பதற்கு உள்நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கப்பட வேண்டும் என இப்பொழுது கருதப்படுகிறது. அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டுப் பொருட்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை அதிகரிக்க வேண்டுமென வர்த்தக அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்படிச் செய்வதனல் உள்நாட்டுப் பொருட்களை மேலும் மேலும் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கு எதுவித கஷ்டமும் இருக்காது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

றப்பரால் செய்யப்பட்ட காலணிகள், எழுதியதை அழிக்க உதவும் றப்பர், பொம்மைகள், சவர்க்காரம், அலுமினியப்பாத்திரங்கள், கம்பளங்கள், றெடிமேட் உடைகள், சூட்கேஸ் பெட்டிகள் போன்ற பலவற்றையும் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிஸ்கோத்துகள், தீப்பெட்டிகள், 'ரி. சேர்ட்ஸ்', பனியன்கள். சிமெந்து அஸ்பெற்றஸ் தகடுகள், கரிப்பொருட்கள் ஆகியன பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. குடை, சாரம், பழரசங்கள், சொக்லேட், ஜாம்வகைகள், புற்பாய்கள், கைத்துண்டுகள், துவாய்கள் போன்றவற்றையும் பெருமளவில் தயார் செய்து ஏற்றுமதி செய்யலாம் என தனிப்பட்ட வர்த்தகர்கள் கருதுகிறர்கள். மேலே சொல்லப்பட்ட பொருட்கள் பலவற்றிற்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பு இருப்பதாக வர்த்தக அமைச்சைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஆசிய, ஆபிரிக்க, மத்தியகிழக்கு, ஐரோப்பிய நாடுகள் இப்பொருட்களைப்பற்றி விசாரித்து வருவதாகவும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு சென்று வந்த வர்த்தக தூதுகோஷ்டி பல பொருட்களுக்கு ஆர்டர் வாங்கி வந்துள்ளதாகவும் தனிப்பட்ட வர்த்தக ஸ்தானங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஜெர்மனியில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சி மூலம் தாம் 200 லட்சம் ரூபாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருப்பதாகவும் ஆனல் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கைக்கிணங்க 50 லட்சம் ரூபாவிற்கே ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருப்பதாக தனிப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### பல்லவர் காலத்து காசுகள் கண்டுபிடிப்பு

சென்னை, ஜன. 9

தமிழகத்தில் பல்லவ மன்னர்கள் தங்கள் தலைநகராகக் கொண்டிருந்த காஞ்சிபுரத்தில் ஈயக் காசுகளும் மற்றும் அபூர்வ பொருள்களும் பூமிக்கடியில் புதைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என நம்பப்படுகிறது. தென் இந்தியாவின் புராதன காலத்தின் பல்வேறு அம்சங்களை இவை வெளிப்படுத்தக்கூடும். இதுபோன்ற நாணயங்கள் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவையேயாகும் எனக் கூறப்படுகிறது.

காஞ்சிபுரத்திலுள்ள சங்கர மடத்துக்குச் சொந்தமான ஒரு இடத்தில், ஸ்ரீ காமகோடிபீட சங்கராச்சாரியார் அனுமதியுடன் இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சிப் பகுதியினர் தற்போது ஆராய்ச்சிகளை நடத்திவருகின்றனர்.

இந்த இடத்தில் ஈயக் காசுகள, செங்கற் சுவர்கள்போன்ற பொருள்களுடன்கூட வேறு பல பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பண்டைக்காலத்தில் நிலவிய பழக்க வழக்கங்கள்பற்றியும் இதனல் தெரியவந்துள்ளன.

### மணி வாக்கு

எதிர்காலத்தில் என்ன நடக்க இருக்கிறதென்பது பற்றிச் சோதிடம் பார்க்க நான் விரும்பவில்லை. இப்போது நடப்பனபற்றி கவனிப்பதே என் வேலை. அடுத்த விநாடி நடக்க இருப்பதைமாற்ற எனக்கு தெய்வம் சக்தி அளிக்கவில்லை.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மார்கழி மீ 26 உ (10-1-63)


## புயலும் வெள்ளமும்

என்றுமே இல்லாதபடி மார்கழி மாதத்தில் பெருமழை பெய்து, வெள்ளம்பெருகி, வடக்கு, கிழக்கு மாகாண மக்களில் பலருக்கு பெரும் கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்துடன் புயலும் சேர்ந்து, பருத்தித்துறை முதலிய இடங்களில் அதிக சேதங்களை விளைவித்துள்ளன இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஏழைகளே

விஞ்ஞானம் பெரிதும் வளர்ந்து வருகிறதென்றாலும், மழை, புயல் இவற்றைத் தடுக்கக்கூடிய சக்தி இன்னும் மனிதனுக்கு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் இந்தத் திறமையையும் மனிதன் பெறக்கூடும். ஆனால் இன்றைய நிலைமையில், நாம் செய்யக்கூடியதும், செய்யவேண்டியதுமான முக்கிய வேலை, இயற்கையின் இச்சோதனைகளுக்கு உட்பட்டுள்ள மக்களுக்குக் கூடுமான உதவியை தாமதிக்காமல் உடனடியாக அளிக்க வேண்டியதுதான். இதற்கான கடமை அரசாங்கத்தையே சட்டப்படி சேரும். அரசாங்கம் இவ்விஷயமாக என்ன உதவிகள் செய்தாலும் சரி ஏழைமக்கள் ஆங்காங்கே பெரிதும் அவதிப்படுவதால், வசதியுள்ளவர்கள் எல்லாரும் தங்களாலான எல்லா விதங்களிலும், உதவிசெய்ய முன்வரவேண்டியதவசியமாகும்.

பல குடும்பங்கள் வீடின்றித் தவிப்பதாகவும், தங்கள் உடைமைகளையெல்லாம் வெள்ளத்தில் இழந்து அகதிகளாகி விட்டதாகவும் தெரிகிறது அவர்களுக்கெல்லாம் புனர் வாழ்வு அளிக்கவேண்டும். கிளிநொச்சியைச் சேர்ந்த தர்மரத்திலே அகதிகளாகக் குடியேறிய பல குடும்பங்கள், குழந்தை குட்டிகளுடன் இந்த மழை வெள்ளத்தில் பெரிதும் அவதிப்படுகின்றனவாம். அரசியல் முதலிய காரணங்களால் அவர்கள் விஷயத்தில் அலட்சியமாக இராமல், மனிதாபிமானத்துடன் அவர்களுக்கு அதிகமான உதவிகளை அளித்து ஆதரிக்கவேண்டும். அன்பு, கருணை என்று வாயளவில் நிறுத்திக்கொள்ளாமல் இப்படிப்பட்ட அனாதைகளுக்கு, இவ்வித சமயங்களில் கூடுமான உதவிகளைச் செய்பவர்களே, இறைவனின் கருணைக்கும் பாத்திரமாவார்கள்

ஆனையிறவுப்பகுதியில் இதுவரை என்றுமே இல்லாதபடி வெள்ளம் ஏற்பட்டு, ரஸ்தா போக்குவரத்துக்கு ஆபத்து ஏற்பட்டதற்குக் காரணமுண்டு. இரணமடு ஏரியிலிருந்து பாயும் அதிகப்படி நீர், கடலில் வீணாகிவிடாமல் ஆனையிறவுப் பாலத்தில் அணைபோட்டு, ஒருபக்கம் நல்லதண்ணீரைத் தேக்கி, நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தும் பெரிய திட்டம் இப்போது நடப்புக்கு வந்துள்ளது. இந்த வெள்ளம் காரணமாக ஆனையிறவுப் பாலத்தின் ஒருபக்கம் நல்ல தண்ணீர் அதிகரித்துள்ளது. கரையை உயர்த்தி, நீர்த்தேக்கத்துக்கு இனி ஒழுங்குசெய்ய வேண்டும். இது பரீட்சார்த்த திட்டமே. கரை உயரமாக இல்லாததால்தான் பாலத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது தற்காலிகமான ஒரு நிலைமையே. இதைச் சமாளிக்க அவசர ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிகிறது. என்றாலும், இந்தத் திட்டப்படி, பாசனத்துக்கான நல்ல தண்ணீர் ஏரியாக மாற்றும் திட்டம் வெற்றி அடைந்து வருவது வரவேற்கத்தக்கதாகும். அப்படிப்பார்த்தால் இந்தவெள்ளத்தால்கூட இங்கு ஒரு பெரிய நன்மை ஏற்பட்டுள்ளதாகவே கொள்ளலாம்.

இத்திட்டத்தை ஆரம்பித்து நடத்தும் நிபுணர்களை கொண்டு இதை மேலும் வெற்றிகரமாக நடத்திவைக்கத்தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

# சிவலோகத்தில் மூன்று நாட்கள்

— ஐயாறன் எழுதுவது —

ஏழுவருடங்களுக்கு ஒருமுறைதான் இந்தியாவுக்குச் செல்லலாமென்று ஒருதடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதல்லவா? இந்த உத்தரவை சிறப்பாக தமிழர் அனைவரும் கண்டிப்பினும் இதனாலும் ஒரு பெரிய நன்மை ஏற்பட்டுள்ளதை திருக்கேதீச்சரத்தில் நேரில் பார்த்தேன். என்ன தெரியுமா? அங்கு திருவாசக விழாவும் சாதனையும் பத்து நாட்கள் வெற்றிகரமாக நடந்ததுதான்

தடை உத்தரவுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். இந்தத் தடைமட்டும் இல்லாதிருப்பின் இவ்விழாவுக்கு வந்திருந்தவர்களில் நூற்றுக்கு எண்பது பேர் சிதம்பரத்துக்கு திருவாதிரை உற்சவத்துக்குச் சென்றிருப்பார்கள். விழாவுக்கு ஒழுங்கு செய்த அன்பர் சரவணமுத்து அநேகமாக சிதம்பரத்தில்தான் இருந்திருப்பார்! தடை உத்தரவு காரணமாக சிதம்பரத்துக்குப் போக முடியாதவர்களில் பலரும் திருக்கேதீச்சரத்துக்கு வந்திருந்தார்கள். விழாவும் மிகச் சிறப்பாக நடந்தது. சிதம்பரத்திலே திருவாதிரை உற்சவத்தில், முன்னரெல்லாம் எங்கும் யாழ்ப்பாணத்தவர்மயமாக இருக்குமாம். இப்போது ஒருசிலர்கூட வரவில்லையே என்று சிவதீட்சகர்கள் தம்மிடம் கூறி மிகவும் வருந்தியதாக கி. வா. ஜ. தெரிவித்து, இந்தத் தடையெல்லாம் சீக்கிரத்தில் நீங்க வேண்டுமென்றும் பிரார்த்தித்தார். தடை நீங்கவேண்டுமென்பது தான் என் பிரார்த்தனையும். ஆனால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நம்புகிறவர்கள் இந்தத் தடையிலும் ஒருநன்மை இருப்பதை உணரலாம். திருக்கேதீச்சரத்தை இனிப் பலப்படுத்த வேண்டிய பெரிய கைங்கரியமுள்ளது. இதில் முழுமூச்சுடனே இனி ஈழத்துச் சைவமக்கள் ஈடுபட வேண்டும். அதை நினைக்கும் போது இந்தத் தடைபோட்டுள்ளதும் ஒருவித நன்மைக்கே என்று தோன்றுகிறது.

* * *

இந்த விழாவை நடத்தியது ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தார். திருக்கேதீச்சரத் திருப்பணியைச் செய்ய வேண்டுமென்று முன்வந்து ஆரம்பித்தவர்கள் இத்திருக்கூட்டத்தினரே. இதன் செயலாளரான சரவணமுத்து அடிகள், கொழும்பில் தெமட்டக்கொடையில் பெரிய கடை வைத்து வியாபாரம் செய்தார். கலகக் காலத்தில், அவர் கடையைக் கொளுத்திவிடக் காடையர் செய்த முயற்சி பலிக்காமல் தெய்வம் காத்தது ஓர் அதிசயக் கதையாகும். அவர் செய்துவரும் அன்னம் பாலிக்கும் தர்மமே முன்னின்று காத்ததென்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. அவர் திருக்கேதீச்சரத்தில் கட்டியுள்ள திருவாசக மடத்திலேயே இந்தவிழாவும் சாதனையும் நடைபெற்றன. முதல் நான்கு நாட்களும் கடைசி இருநாட்களும் சாதனைவாரம். திருவெம்பாவை பாராயணம், ஆலயவழிபாடு, வேதபாராயணம், தியானம், புராணபடனம், விரிவுரைகள், கூட்டுவழிபாடு, கருத்தரங்கம் முதலியன இதில் இடம்பெற்றன. இதில் ஆண்களும் பெண்களுமாகப் பல அன்பர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர்.

இடையிலே மூன்று நாட்களிலும்தான் திருவாசகவிழா. இதற்கு திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியத்தையும் அழைத்திருந்தனர். அவர் வருவதாகவுமிருந்தது. என்றாலும் ஏதோ காரணத்தால் அவர் வருகை நின்றது. சமய இலக்கியப் பிரசங்கம் செய்பவர்களுக்கும் தமிழகத்தில் இப்போது நல்லகாலம் பிறந்துள்ளதாம். சில இடங்களிலே நூறு முதல் இருநூறுவரையிலும்கூட ஒரு பிரசங்கத்துக்கு அளிப்பதாகத் தெரிகிறது. அதுவும் டிசம்பர், ஜனவரி மாதம் இதற்கு நல்ல சீஸனம். அப்படியிருந்தும் ஜகந்நாதன் அவர்கள், பலதடைகளையும் திருவருளால் தவிர்த்து, இங்கு வந்து சேர்ந்தது பெரிய காரியம். அவர் வந்து மூன்று நாளும் 6 பிரசங்கங்கள் செய்தார். ஒன்றைவிட ஒன்று போட்டி போட்டு கேட்போரைப் பரவசப்படுத்தியது.

இதில் கடைசிநாள் இரண்டு மணி நேரம் பேசிய பேச்சை என்றும் மறக்க முடியாது. எல்லாம் திருவாசகம்பற்றித்தான். இரு மாவட்ட நீதிபதிகளான தனபாலசிங்கமும், கந்தசாமியும் செய்த தலைமைப் பிரசங்கங்களைக் கேட்ட கி. வா. ஜ., இங்கு நீதிபதிகளும்கூட இவ்வளவு அறிவுடனும் ஆர்வத்துடனும் விழாவில் கலந்து கொண்டு பேசியதைப்பற்றி வியந்து மகிழ்ந்தார். 'ஆத்மஜோதி', 'ரிலிஜியஸ் டைஜஸ்ட் சஞ்சிகை'களின் ஆசிரியரான கே. இராமச்சந்திராவின் இருபுதல்விகளும் இனிமையாகப் பாடிய திருவாசகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாலே போதுமென்றும், வேறு பேச்சு ஒன்றுமே தேவையில்லையென்றும் பாராட்டினர் அவர்.

இவ்விழாவில் சில இளம் சிங்கங்கள் உள்ளிட்டு பல அன்பர்கள் பேசினர். மணி பாகவதரின் 'பிட்டுக்கு மண் சுமந்த' கதாபிரசங்கமும் நடந்தது. திருவாத அடிகள் புராணபடனம் நடந்தது. பலபிரமுகர்கள் இதில் கலந்து கொண்டார்கள். வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம் மூன்று நாட்களும் திருக்கேதீச்சரமே ஒருசிவலோகமாகக் காட்சி அளித்தது. முதல் முதலாக அங்கு நடந்த இந்த விழா மிக வெற்றியுடன் நடந்தது. இந்த வெற்றிக்கு ஈழத்து சிவனடியார் கூட்டத்தையும் சிறப்பாக, சிவராசா, சிவஞானம் இவர்களையும் பாராட்ட வேண்டும். திருக்கேதீச்சரத்தில் திருஞானசம்பந்தர்மடம் கட்டப்பட்டு வருகிறது. அப்பர், சுந்தரர் பெயராலும் மடங்கள்கட்டி இவர்கள் பெயராலும் இவ்வித திருமுறை விழாக்கள், வருடத்தில் நான்கு தடவையாக நடைபெற்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அதிக சிரமம் தான். என்றாலும் கேதீச்சரநாதன் அருள் இருந்தால் எதுதான் நடவாது? அவன் அருள் பாலிக்க ஆரம்பித்து விட்டதைக் கண்டேன். மூர்த்தி, தவம், தீர்த்தம் மூன்றும் விசேஷமாகவுள்ள இந்தப் பாடல்பெற்ற ஸ்தலம், ஈழத்துச் சைவசமூகத்தின் உயிர் நிலையமாகும். பாவம், வினை, கவலை, பயம் எல்லாம் நீக்க அங்கு நீண்ட காலமாக திருக்கேதீச்சரநாதன் காத்திருக்கிறான். "பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல் தேவன் எனை யாழ்வான் திருக்கேதீச்சரத்தானே" என்று சுந்தரரே உறுதி கூறுகின்றார். அப்பேர்ப்பட்ட திவ்யஸ்தலம் புத்துயிர் பெற்று வளர்ந்து வருவதைக் கண்டு, புதுநம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் அதை விட்டு வரவே மனமில்லாமல் திரும்பினேன்.

---

## தமிப் பெண்களின் கற்பு நெறி

### பிலிப்பைன்ஸ் மாணவர்கள் பாராட்டு

குன்னூர், ஜன. 9

தமிழ்ப்பெண்களின் கற்பு நெறிபற்றி பிலிப்பைன்ஸ்நாட்டு மாணவர்கள் புகழ்ந்துரைத்துள்ளனர்.

கொழும்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகைபெற்று பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் படித்து வரும் மாணவர்கள் இந்தியாவில் தமிழ்ப் பெண்களின் கற்பு நெறிகளைப்பற்றி நாங்கள் தெரிந்துகொண்டபோது தமிழ்ப்பெண்களையே திருமணம் செய்துகொண்டு இந்நாட்டிலேயே தங்கிவிடலாமா என்று எங்களுக்குத் தோன்றுகிறது என்றார்கள்.

மேலும் எங்களின் கல்லூரியில் காலையில் நடைபெறும் தேசியக்கொடி வணக்கத்திற்கு சரிவர மாணவர்கள் வராதிருப்பதை நாங்கள் கண்டோம்.

அதனால் இந்தியர்களுக்கு நாட்டுப் பற்றுக்குறைவு என எண்ணினோம். ஆனால் சீன ஆக்கிரமிப்பிற்குப் பின்புதான் இந்நாட்டவரின் நாட்டுப் பற்றைக் கண்டோம். முதலமைச்சர் திரு. காமராஜர் கோயம்புத்தூர் வந்திருந்த போது பாதுகாப்பு நிதிக்கு பெரியவர்கள் முதல் குழந்தை வரை தங்கமும் பணமும் அள்ளிக் கொடுத்ததை கண்டு இந்தியர்களின் நாட்டுப்பற்றிற்கு ஈடு இணைகிடையாது என்று பெருமிதம் கொண்டோம்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## தருமபுரம் மக்கள் படும் கஷ்டம்

பெரும் மழை காரணமாக ஊருக்கு மேற்கே உள்ள நுவரை ஆறும் கிழக்கே உள்ள நெத்தலி ஆறும் இம் மாதம் 4-ம் திகதி முதலாகப் பெருக்கெடுத்துப் பாய்கின்றன். இதனால் தருமபுரம் மக்கள் கிளிநொச்சி சென்று தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்க முடியாது தவிக்கின்றன தபால் தந்தி உட்பட போக்குவரவு வசதிகள் முற்றாகத் துண்டிக்கப் பட்டுவிட்டன இதே நிலைதான் சென்ற நான்கு ஆண்டுகளிலும் மழைக்காலத்தின் போதெல்லாம். தருமபுரம் மக்கள் சிலர் வீடிழந்து போயுள்ளனர். மற்றும் சிலரை அந்நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

மத்திய வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டிருந்த 10 ஏக்கர் காணியில் பல ஆயிரம் ரூபா செலவிட்டுப் பயிர் செய்யப்பட்டது. அங்கெல்லாம் இன்றைய நிலையில் யாரும் போய்ப் பார்க்க முடியாதிருப்பதினால் பயிர் வயல் காவலிழந்து வன விலங்குகளால் நாசம் செய்யப்படுகின்றன.

அடுத்த ஆண்டு இவர்கள் கமச் செய்கையில் மனம் திரும்ப ஆண்டவன்தான் துணை செய்ய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட கஷ்டங்கள் அத்தனையும் ஆண்டுதோறும் மழைக்காலத்தில் தருமபுரம் வாசிகளுக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன ஆண்டுதோறும் இவற்றையிட்டு தருமபுரம் மக்கள் முறையிட்டுக்கொண்டும் வருகின்றனர் எப்பொழுது விடியுமோ?

செ. புஷ்பராசா

---

# 26 புதிய கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு வரிவிலக்கு

## நிதிமந்திரியின் அறிவிப்பு

கொழும்பு, புதன்

26 புதிய கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு நிதிமந்திரி வரிவிலக்கு அளிக்க முடிவு செய்துள்ளார். கைத்தொழில் மந்திரியின் கோரிக்கைக்கு இணங்கியே நிதிமந்திரி இவ்வாறு முடிவுசெய்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இக்கைத்தொழில்களுக்கு வரிவிலக்கு அளிப்பது அவசியமென கைத்தொழில் மந்திரி சுட்டிக்காட்டியிருந்தார்.

கைத்தொழில் மந்திரி எந்தக் கைத்தொழிலை இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமெனக் கருதுகிறாரோ அந்தத்துறை 'அங்கீகரிக்கப்பட்டதிட்டம்' எனகணிக்கப்படும். இவ்விதம் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

இவ்வித கைத்தொழில் ஸ்தாபனங்களில் முதலீடுசெய்யும் தனிப்பட்டவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுமென அரசாங்கம் முன்னர் தெரிவித்திருந்தது. தற்பொழுது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட சட்டங்களின் பிரகாரம் 1963-ம் வருடம் ஏப்ரல் முதற் திகதிக்கு முன்னரோ அன்றிப் பின்போ ஆரம்பிக்கும் எந்த மதிப்பீட்டு வருடத்திற்கும் முன்னர் புதிய கைத்தொழிலில் முதலீடுசெய்யும் தனிப்பட்டவர்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்படும்.

ரூ. 25,000 அதிகக் கூடுதலான வரிச் சலுகையாக இருக்கும். முதலீடுசெய்த ஒருவர் பெறும் வருமானத்தில் ஐந்தில் ஒருபகுதிக்கு அதிகமாக வரி வசூலிக்கப்படமாட்டாது.

# பதிவுப் பிரஜை யார்?

## வம்சாவளிப்பிரஜையார்?

## "இலங்கையில் நான்கு வகைப் பிரஜைகள் உள்ளனர்"

— செனட்டர்

### செனட் சபையில் விவாதம்

கொழும்பு, புதன்

வம்சாவளிப் பிரசைகளுக்கும் பதிவுப் பிரசைகளுக்கு முள்ள ஏற்றத்தாழ்வு, தாரதம்மியம் என்பன யாவை?

நேற்றைய செனட்சபைக் கூட்டத்தில் இதுவிஷயம் ஒரு ரசமான விவாதத்துக்குள்ளாயிற்று.

அத்தியாவசியப் பொட்களை இறக்குமதி செய்வதில் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகா வம்சாவழிப் பிரசைகள் அல்லாத இலங்கையர் பலர் உட்பட குறிப்பிட்டதொரு சிறு தொகையினருக்கே முழு உரிமையும் அளிக்க முயற்சிக்கிறதென்றும் அதனல் இறக்குமதி வர்த்தகத்துக்கு புதிதாக வரும் இலங்கையரை அது ஒதுக்கிவிடுகிறதென்றும் குற்றம்சாட்டி செனட்டர் லயார்ட் சுந்தரா ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தார். இறக்குமதி வர்த்தகத்தில் புதிதாகப் பிரவேசிக்கும் இலங்கையருக்கும் அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய லைசென்ஸுகளை வழங்கும் வகையில் இறக்குமதி கட்டுப்பாட்டு அதிகாரி 1963 வருஷ சட்டவிதிகளில் திருத்தம் செய்து கொள்ள வேண்டுமெனத் தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

வர்த்தகர்கள் பலபேர் சிறு அளவாகப் பொருள்களை இறக்குமதி செய்ய நேர்ந்தால் துறைமுகத்தில் இட நெருக்கடி ஏற்படக்கூடுமென்பது இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம் என அக்கிராசனர் கூறினர்.

செனட்டர் ஜயசுந்தரா: புதிதாக வருவோருக்கும் ஒரு பங்கு ஒதுக்கவேண்டியது தான் நியாயமானது.

அக்கிராசனர்: நாடுநெருக்கடியானதொரு நிலைமையை எதிர்நோக்கியுள்ளபோது அன்னியச் செலாவணியை ஸ்தரப்படுத்த வேண்டிய அவசியத்தின் பேரில் ஏற்கனவே இறக்குமதி வர்த்தகத்தில் நன்கு பழகிப் போயிருந்தவர்களுக்கே முதன்மை காட்டியிருக்கலாம். புதிய ஆட்களை அனுமதிப்பது தேவையற்றதொரு மனக்கசப்பை உண்டுபடுத்தி விடுவதாயும் தோன்றியிருக்கலாம்.

செனட்டர் டொரிக் டிசொய்சா: அக்கிராசனர் சபையின் விவாதத்தில் இந்தமாதிரி கலந்துகொள்வதாயும் ஒரு தலைப்பட்சமாகப் பேசுவதையும் நாம் வேறெங்கும் கேள்விப்படவில்லை.

செனட்டர் சொய்சா பேசுகையில் தீர்மானத்தின் வாசக அமைப்பை தான் சுவைத்து படித்ததாயும் பதிவுப் பிரசைகளுக்கும் வம்சாவழிப் பிரசைகளுக்கும் காட்டப்படும். பாகுபாடு அதில் தெரிகிறதென்றும் ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கை தான் இங்கேயும் பிரதிபலிக்கிறதென்றும் சொன்னர்.

செனட்டர் பீரிஸ்: அந்தக் கூற்று தவருனது.

செனட்டர் சொய்சா: இரண்டாம்தரப் பிரசையாகவே நான் இப்பொழுது பேசுகிறேன். யு. என். பீ.யாரின் கொள்கைப்படி இலங்கையில் வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை, நாடற்றவர்கள், அந்நிய நாட்டினர் என நாலு வகைப் பிரஜைகள் வாழ்கிருர்கள்.

செனட்டர் சாம். பி. ஸி. பெர்னண்டோ: தொழில் துறைகளை இலங்கையர் மயமாக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்குச் சாதகமாகவே வர்த்தக அமைச்சு ஒரு திட்டத்தை ஆலோசித்து வருகிறது. அதனல் தீர்மானம் எனக்குச் சம்மதமாயில்லை.

தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் அதைத் திரும்ப 'வாபஸ்' பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இன்னொரு தீர்மானம் சபைக்கு வந்தபோது அரசாங்கக் கட்சி செனட்டர்கள் அதைத் எதிர்த்து வாக்களித்தார்கள்.

செனட்டர் ஜயசுந்தராவின் தீர்மானத்தை சபையின் வாக்கெடுப்புக்கு விட்டபோது தீர்மானம் தோல்வியுற்றது.

## அக்ராவில் குண்டுவீச்சு

அக்ரா, ஜன. 9

இங்கு நடைபெற்ற கூட்டமொன்றின் போது குண்டு வீச்சு நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனதிபதி டாக்டர் என்குருமாவும் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 25,000 பேருக்கு மேற்பட்டவர்கள் கூடியிருந்த பொதுக் கூட்டத்தில் கான ஜனதிபதி டாக்டர் என்குருமா பேசி முடிந்தபின்னரே குண்டுவீசப்பட்டது. இக் குண்டு வீச்சில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக்குண்டு வீச்சினல் காயமுற்றோர் அக்ரா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் மீதுதான் குண்டு வீசப் பட்டதென்றும் ஜனதிபதியின் மீது குண்டுவீசப் படவில்லை எனவும் நம்பப்படுகிறது.

குண்டுவீச்சிற்கு முன் பேசிய ஜனதிபதி சோஷலிஸ்ட்டானவை உருவாக்கும்வரை தாம் மக்கள் கடமைகளை செவ்வனே செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## பொதுவுடைமையைத் தடுக்க புதிய முறை

### "இந்துசமயத்தைப் பரப்பவேண்டும்"

கல்கத்தா, ஜன. 9

"இந்து சமயத்தைத் தக்கமுறையில் பயன்படுத்திஞல் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத்தைப்போலின்றி அது பொதுவுடமை பரவுவதைத் தடுக்க உதவும்" என்று அகில இந்திய இந்து மகாசபைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. ஜி. தேசபாண்டே இன்று இங்கு கூறினர்.

இந்துசமயத்தின் அடிப்படைகளைப் பரப்ப முயலவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

"பொதுவுடமை பரவுவதை கொள்கைவழியிலும் தடுக்க வேண்டும். அதற்கு உதவக்கூடிய இந்துசமயக் கொள்கைகளைப் பரப்பவேண்டும்."

திபெத்தைச் சீனவுக்குக் கொடுத்தது வருந்தத்தக்கது என்று இந்து மகாசபைப் பொதுச் செயலாளர் திரு. பீசென் சந்த் சேத் கூறினர்.

சீன ஆக்கிரமிப்பை முறியடிப்பதில் அரசு நடவடிக்கையை பலப்படுத்துமாறு மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

திபேத்தை விட்டுக் கொடுத்ததும் தலாய்லாமா அரசாங்கத்தை ஏற்காததும் பெரிய தவறுதம் என்று திரு. என். சி. சாட்டர்சி கூறினர்.

அகில இந்திய இந்து மகா சபைக்கூட்டத்தைத் தொடங்கிவைத்த திரு. தாகூர் நாது சிங் கூறியதாவது:-

கடந்தகாலத்தில் என்ன தவறுகள் செய்திருந்தாலும் அரசை இன்றுநாம் முழுமனதுடன் ஆதரிக்க வேண்டும். அண்மையில் ஏற்பட்டதோல்விகளுக்கு தளபதியோ, வீரர்களோ, யார் காரணமாக இருப்பினும் நம் வீரர்கள் நம்மவர்கள். அவர்கள் உலகில் உள்ள மற்ற வீரர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை உணரவேண்டும்.

துன்புறுத்தாமையைப் பெரிதும் போற்றியதன் விளைவே தொடக்க காலத்தோல்விகளுக்குக் காரணம். ஒரு முறை செய்த தவருல் ஏற்பட்டவைகளை நாம் மறந்துவிடக்கூடாது.

"இந்திய – சீனத் தகராறுக்கு உலக நீதிமன்றத்தை அணுகிப் பயனில்லை. காஷ்மீர்ச் சிக்கலுக்கு ஐ. நா. வை அணுகினேம். ஏற்பட்ட பயன் நமக்குத் தெரியும். பாகிஸ்தானுடன் இயன்ற வரை நண்பர்களாகவே இருக்க எண்ணுவது நல்லது.

—

## தர்மபுரம்...

(8பக்கத் தொடர்ச்சி)

ளவில் ஏற்பட்டிருப்பதாகவும் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஆனையிறவுப் பாலத்தில் ஆறு அங்குலம்வரை நீர்மட்டம் குறைந்திருக்கிறதாகவும் இரணமடுக் குளத்திலும் ஒரு அடி ஒன்பது அங்குலமளவில் நீர்மட்டம் அதிகரித்த அளவில் குறைந்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கடற்படை, சுங்க இலாகா படகுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுசெல்லவும் உதவிகளுக்காகவும் பயன்படுத்தப்படும்.

இப் பகுதிகளிலுள்ளவர்களுக்கு உதவிசெய்வதில் கிளிநொச்சி எம். பி., காரியாதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் கூட்டாக முயற்சிகள் செய்துவருகின்றனர்.

வீடிழந்தவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு பாடசாலைகளில் இருப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனையிறவுப் பாலத்துக்கு மேலால் வெள்ளம் பாய்வதால் இன்னமும் போக்குவரத்தில் திருப்தியான நிலைமை ஏற்படவில்லை.

ஆனையிறவு உப்பளத்துக்கு வெள்ளத்தினல் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென்றும் வெள்ளத்தினல் ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை எதுவும் இல்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளும் மற்றவர்களும் 24 மணிநேரமும் முழு மூச்சாக வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் ஆபத்து குறைந்துள்ளதாம்.

## "அரசியல்வாதிகளின் இசைக்கு ஆடுகிருர்கள் ஆசிரியர்கள்"

### பேராசிரியர் கருத்து

மஹரகம, புதன்

"இப்பொழுது ஆசிரியர்கள் அரசியல் தலையீடு காரணமாக எதுவும் செய்ய முடியாமல் மனவருத்தப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பயனுள்ள வேலை செய்ய வேண்டிய அவர்கள், அரசியல் வாதிகளினதும், பெற்றோர்களினதும் இசைக்கேற்ப நடமாட வேண்டியுள்ளது."

பாடசாலை பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்ட வித்தியலங்கார பல்கலைக்கழக சிங்களத் தலைமைப் பேராசிரியர் கொட்டகென பனகிட்டி தேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:

பல்கலைக்கழகங்களை குறைகூறிக்கொள்வது இப்பொது அதிகரித்துக்கொண்டு வருகிறது. பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் நற்பழக்கமில்லாதவர்களே தவிர பல்கலைக்கழகங்கள் கூடாதவையல்ல. பல்கலைக் கழக மாணவர்கள், ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளாலும், ஊழல் நிறைந்த பெற்றோர்களாலுமே தீய பழக்கங்களையுடையவர்களாக வளருகின்றார்கள். இவர்கள் நல்ல பாடசாலைகளில் படித்தாலும் எதுவிதத்திலும் திருந்துவதில்லை இவர்களை ஏன் ஆசிரியர்கள் திருத்த முடியாது எனக்கேட்கலாம். முன்பு பாடசாலையில் உள்ள வேலைகளை ஆசிரியர்களே கவனிக்க வேண்டியிருந்தது, ஆனல் இப்போதோ அவர்கள் வகுப்பறையில் மட்டும் தான் இருப்பார்கள். பெற்றோர்களும், அரசியல்வாதிகளும் பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு விஷயத்திலும் தலையிடுகிருர்கள். மாணவர்களைத் தண்டித்தாலோ அல்லது புத்தி கூறினலோ பெற்றோர்களும், அரசியல் வாதிகளும் பாடசாலைக்கு வந்து முறையிடுவார்களென்றும், தாங்கள் இடம் மாற்றப் படுவார்களெனவும் ஆசிரியர்கள் அஞ்சுகிருர்கள். இதனல் மனிதத்தன்மையுடன் ஆசிரியர்கள் தமது கடமையைச் செய்யக் கூடிய சூழ்நிலை விரைவில் ஏற்படவேண்டும். அதனல் தான் மாணவர்களைத் திருத்த முடியும்.

—

## நீதிபரிபாலனசபை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றின் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் மந்திரிகளுக்கு இருக்கும் வகையில் புதிய திருத்த மசோதா ஒன்றைக கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நீதிபரிபாலன சேவைக் கமிஷனே இப்பொழுது இந்த நீதிபரிபாலன உத்தியோகஸ்தர்களை நியமித்துவருகிறது.

## சுதந்திரக் கட்சியை ஆதரித்தது தவறு

—சமரக்கொடி

கம்புறுப்பிட்டியா, புதன்

'1960-ம் வருட பொதுத் தேர்தலில் சமசமாஜக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து ஒருதவறைச் செய்துவிட்டது' என சமசமாஜக் கட்சி அங்கத்தவரும் புலத்சிங்கள எம். பி. யுமான திரு. எட்மண்ட் சமரக்கொடி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

திரு. சமரக்கொடி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்தத் தவறு இப்பொழுது எமது கட்சியினரால் உணரப்படுகிறது. எமது கட்சி சுதந்திரக்கட்சியில் நம்பிக்கை வைத்திருந்ததால் நாம் அதற்கு ஆதரவு கொடுக்கவில்லை. ஆனல் மக்களின் அபிப்பிராயம் நம்மை அவர்களுக்கு ஆதரவு கொடுக்கத் தூண்டியது.

கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் தான் இலங்கைக்கு விஞ்ஞான சோஷலிஸத்தை அமைத்துக் கொடுக்கும். இந்த இருகட்சிகளுக்குள்ளும் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் இருகட்சிகளும் ஒற்றுமைப்பட வாய்ப்பிருக்கிறது.

—

## சேமிப்புப் பணத்திற்கு வட்டி கணக்கிடவில்லை

கொழும்பு, புதன்

தபால் கந்தோரில் சேமிப்புப் பணம் கட்டி வந்தவர்களின் 1962-ம் ஆண்டு வரையுமான வட்டிப்பணம் இன்னும் கணக்கிடப்படவில்லை. 30 லட்சம் சேமிப்புக்களின் வட்டி பல மாதங்களாக கணக்கிடுவார் இன்றி கிடக்கின்றது. மேலதிக வேலைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கொடுக்கப்படாததால் இந்த வேலைகளைக் கவனித்து வந்தவர்கள் இப்பொழுது வேலை செய்வதில்லை. இதனலேயே இன்னும் வட்டிப்பணம் கணக்கிடப்படாமல் இருக்கிறது.

இவ் விதம் வட்டி கணக்கிடப்படாதிருப்பதால் இந்த ஜனவரி மாதம் கட்டப்படும் சேமிப்புப் பணம் 1962-ம் ஆண்டு பணத்துடன் சேர்த்துப் பதியப்படமாட்டாது.

—

மதுரை, ஜன. 8

ஓடும் லாரியிலிருந்து தவறிக கீழே விழுந்ததினல் இராசு என்ற இளைஞர் மரணமானர்.

சாயல்குடியைச் சேர்ந்த இராசு (20) என்பவர் இங்கு லாரி ஒன்றில் படுத்துக கொண்டு சென்றதாகவும், அப்பொழுது தவறிக் கீழே விழுந்து படுகாயம் அடைந்ததாகவும் தெரியவருகிறது.


## 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் விநியோகம் பற்றி தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக் காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி
'ஈழநாடு' (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு4.

The Manager,
'EELANADU' (COLOMBO)
Saraswathy Hall,
Lorensz Road,
Colombo 4.

Phone: 81975

# ‘வேஷங்கள் போடுவதன்மூலம் இறைவனை காணமுடியாது’

## காரைநகர் மணிவாசகர் விழாவில் திரு. பாஸ்கரத் தொண்டைமான்

யாழ்ப்பாணம், புதன்

“தமிழராகப் பிறப்பது தவப் பெருமைக்குரியது. கடவுள் எத்தன்மையன், எவ்வுருவினன் என்பதற்குக் கோட்பாடுகள் எதுவும் இல்லை. மனிதன் மனத்தில் எழுந்த சிந்தனையின் விளைவே இறைவனுக்குக் கற்பிக்கப்பட்ட உருவங்களாகும்” என்று திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் காரைநகரில் மணிவாசகர் விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினர். அவர் மேலும் பேசியதாவது:-

இராமாயணம், பாரதம், கலித்தொகை போன்ற நூல்கள் ஒவ்வொரு இலட்சியங்களை விளக்குவதுடன் நின்றுவிடுகின்றன. ஆனல் திருவாசகம், இலக்கியம், சரித்திரம், வரலாறு, பக்தி முதலான பல அம்சங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இறைவனை அடைய பக்தி மார்க்கமே சிறந்தது. வேஷங்கள் போடுவதன்மூலம் இறைவனைக் காண முடியாது. மணிவாசகம் நமக்கு உய்யும் வழியைக் காட்டுகிறது.

வரவேற்புரை நல்கிய திரு. க. நல்லதம்பி தமது உரையில், இந்தியாவிலிருந்து அறிஞர்கள் இலங்கை வருவதினல் கலாசாரத் தொடர்பு வலுவடைய உதவிடுவதாக அமையும் என்று குறிப்பிட்டார். விழா ஆரம்பத்தில் திருமுறை ஊர்வலம் நிகழ்ந்தது.

இலங்கை பல்கலைக் சழக பேராசிரியர் திரு. ஆ. வ. மயில்வாகனம் ‘திருவாசகத்தில் சில விஞ்ஞானக் கருத்துக்கள்’ பற்றிப் பேசுகையில் தெரிவித்ததாவது:- மக்கள் சிந்தனைக்கு மூன்று நிலைகள் உள. இவை முறையே நனவு நிலை, இடை நனவு நிலை, உயர் நனவு நிலை எனப்படும். எமது தினசரி வாழ்க்கைக்கு நாம் யாவரும் நனவு நிலையையே உபயோகிக்கின்றோம். ஆழ்ந்து சிந்தித்தும் பிரச்னையொன்றுக்குத் தக்க விடை காணுது அப்பிரச்னையை ஒதுக்கி வைத்திருந்தபோதிலும், எங்கள் மூளையின் ஏதாவதொரு பாகம் நாம் யாதும் அறியாது தன் செயலாற்றி எதிர்பாராதவகையில் எமது பிரச்னைக்கு விடையளிக்கின்றது. இது இடை நனவு நிலை எனப்படுகிறது. உயர் நனவு நிலை எனப்படும் மூன்ருவது நிலையானது அட்டமாசித்திகள் பெற்ற ஞானிகளால் மட்டுமே கையாள முடியும்.

திருவாசகம் ஓர் பக்தி நூல். ஆகவே அதில் உள்ளியற் பேருண்மைகளை எண்ணில் அடங்காவகையில் காண முடியும். முக்காலங்களிலும் தோன்றிய, தோற்றுகின்ற, தோற்றப்படுகின்ற பொருள்களைப்பற்றி அறியும் திறனை மணிவாசகர் பெற்றிருந்தார். எண்ணில்லா மக்கள் அவரது திருவாக்கை உணர்ந்து பக்திபரவசமடைகின்றனர். ஐந்து நூற்ருண்டு காலமாக ஆயிரக்கணக்கான புகழ் பெற்ற விஞ்ஞானிகளின் அரும் பெரும் முயற்சியால் அறியவந்த பேருண்மைகளை ஒரு நொடிப் பொழுதில் மணிவாசகர் உணர்ந்துகொண்டார்.

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளையும் பேசினர்.

---

# ‘தமிழரின் எதிர்காலம் கமத்தொழிலில் தங்கியிருக்கிறது’

யாழ்ப்பாணம், புதன்

“சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய தமிழ்மக்கள் இன்று சிதறப்பட்ட நிலையில் வாழ்கிருர்கள். பண்டைய மன்னர்கள் தமிழையும் சைவத்தையும் போற்றிப் பாதுகாத்தனர். நாம் மொழியையும் சமய ஞானத்தையும் வளர்க்க ஈடுபாடு உடையவர்களாக இருத்தல் வேண்டும். தமிழ் மக்களின் எதிர் காலம் கமத்தொழிலிலேயே தங்கியுள்ளது.”

இவ்வாறு பேராசிரியர் அ. வி. மயில்வாகனம் காரைநகர் மணிவாசகர் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது: இந்தியாவின் விந்திய மலைக்கு வடபால் நடராஜர் திருவுருவத்தைக்காண முடியாது. தமிழ் மக்களாகிய நாம் நமது தவப் பெருமையால் நடராஜ வடிவத்தைக்காணக் கூடியதாக உள்ளது. பிறநாட்டார் இக்கலைச் செல்வத்தைக் கண்டு வியக்கின்றனர். தமிழ் மக்கள் கலைக் கண்ணுடன் சமய வளர்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். சமயத்தைக் கலைமூலமாக வழிபட நமது முன்னேர்கள் வழி காட்டியுள்ளனர்.

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பேசுகையில், ஒருவன் பாடுபட்டுழைத்த செல்வம் எதுவாயிருப்பினும் அவை இறைவனுக்குரியவையே என்று குறிப்பிட்டார்.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் காரை நகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா தலைமையில் நடைபெற்றது. திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் “தென்னுடைய சிவன்” என்பது பற்றிப் பேசுகையில், இறைவன் ஆடிக் கொண்டிருப்பவனென்றும், அவனது ஆட்டம் நிற்கின்றபோது உலகமே அழிந்துவிடுகிறதெனவும், மார்கழியில் திருஆதிரை நட்சத்திரத்தைப் பார்த்தே நடராஜ வடிவத்தை மக்கள் கற்பித்தனர். என்றும் கூறினர். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசினர்.

---

# வித்தியாலயத்தில் இலக்கிய விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இம்மாதம் 11-ம்திகதி பிற்பகல் சாகித்திய வாரத்தையிட்டு இலக்கியவிழா நடைபெறவிருக்கிறது. வித்தியாதிகாரி திருமதி இ. நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கலாநிதி ஆ சதாசிவம், வித்துவான் பொன். முத்துக்குமாரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். ‘பரதனும் குகனும்’ வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும்.

---

# மெரினகடற்கரையில் 4 சடலங்கள்

சென்னை, ஜன. 9

மெரின கடற்கரையில் ராஜதானிக் கல்லூரிக்கு எதிரே சுமார் முப்பது வயதான ஒரு பெண் மூன்று குழந்தைகள் ஆகியோரின் சடலங்கள் ஒதுங்கிக் கிடந்தன. இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

# முதலாவது சிங்கள பரீட்சை

## மார்ச் மாதத்தில்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகஸ்தருக்கான சிங்கள தகுதிப் பரீட்சை இனி ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்திலும் செப்டம்பர் மாதத்திலும் இடம் பெறும். இந்த வருடத்துக்கான முதலாவது சிங்கள தகுதிப் பரீட்சை மார்ச் மாதத்தில் நடைபெறும்.

3-ம் தரத்துக்கான முதலாவது கிரேட் எழுத்துப் பரீட்சை, ஜே. எஸ். ஸி. வகுப்புக்கான IV கிரேட் எழுத்துப் பரீட்சை, ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) வகுப்புக்கான V கிரேட் பரீட்சை ஆகியன மார்ச், செப்டம்பர் ஆகிய மாதங்களில் வரும் முதலாவது சனிக்கிழமைகளில் இடம் பெறும். 5-ம், 7-ம் வகுப்புகளுக்கான கிரேட் II, கிரேட் III தகுதிப் பரீட்சைகள் இந்த மாதங்களில் வரும் இரண்டாவது சனிக்கிழமைகளில்நடைறெும்.

எழுத்துப் பரீட்சைகளுக்குப் பின் கிரேட் I, II, III ஆகியவற்றுக்கான வாய்மூலபரீட்சைகளை பரீட்சைக் கமிஷனர் நடத்துவார். எழுத்துப் பரீட்சையில் போதிய தகுதியடையாதவர்களுக்கு கமிஷனர் விரும்பினல் வாய்மூலப்பரீட்சையைநடத்தலாம்.

திறைசேரிக் காரியதரிசி திரு. ஷேர்லி அமரசிங்கா நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் சகல இலாகாத் தலைவர்களுக்கும் இதை அறிவிக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

---

# அரசாங்க எம். பி.க்களுக்கு மந்திரி வாக்குறுதி

கொழும்பு, புதன்

வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யும்போது நடைபெறும் ஊழல்களைப்பற்றி விசாரணை செய்வதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கக் கட்சி எம். பி.க்களுக்கு வர்த்தக உணவு, மந்திரி வாக்குறுதியளித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்கள ஒப்பந்தம் மூலம் பெறப்படும்போது உத்தியோகஸ்தர்கள் தகாதமுறையில் நடந்துகொள்வதாக அரசாங்க பார்லிமெண்டரிக் கட்சி எம். பி.க்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட எம். பி.க்கள் தெரிவித்ததைத் தொடர்ந்தே உணவு மந்திரி இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து ஒப்பந்தமூலம் உணவுப் பொருட்களைப் பெறும்போது, எந்தத் தனிப்பட்டவர்களுக்குமோ அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்களிக்க கொமிஷன் கொடுக்கப்படுகிறதா என்ற கேள்வியும் கூட்டத்தில் எழுப்பப்பட்டது. கிராம சேவகர் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகள் உட்பட சகல விபரங்களும் தங்களுக்குக் காட்டப்படவேண்டும் என்று ஒரு குழுவினர் கொண்டுவந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. இதன்பின்னர் பொதுச் சேவைககமிஷன் கிராமசேவகர்களை நியமித்தவிதம் சரி என ஒப்புக்கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சிவில் சேவை ஒழிக்கப்பட வேண்டுமென பண்டாரவளை எம். பி. கொண்டுவந்த பிரேரணையையும் குழு ஏற்றுக்கொண்டது. கூட்டத்தில் வேறு பல பிரச்சனைகளும் ஆராயப்பட்டன.

---

# பிரஜாசோஷலிஸ்ட் மேயர்

திருவானந்தபுரம், ஜன. 9

திருவானந்தபுரம் மேயராக பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஸி. எஸ். நீலகண்டன்நாயர் நேற்றுத்தெரிவு செய்யப்பட்டார்.

---

# இடமாற்ற சபைகள் அமைக்குமாறு ஆலோசனை

## வ. இ. தமிழ் ஆசிரியர் சங்கம் கல்விமந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

வித்தியாதிபதியின்கீழ் இயங்கும் பாடசாலைகளில் பயிற்றும் ஆசிரியர் இடமாற்றங்களில் பிரதான ஆசிரியசங்கப் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்து தேசியக் கல்விக்கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வடமாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கோரியுள்ளது.

வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் 3000 ஆசிரியர்களுக்கு மேலான பிரதிநிதிகளைக்கொண்ட மேற்படி சங்கம் கல்விமந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:

### இடமாற்ற பிரச்னை

1. பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதால் எமது அங்கத்தவர்களை இப்பொழுது இடமாற்றப் பிரச்னை எதிர்நோக்கியுள்ளது. இந்த முக்கிய பிரசினைக்கு தீர்வுகாண தேசிய கல்விக் கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளுக்கிணங்க ஒவ்வொரு மாவட்ட காரியாலயங்களிலும் பொதுவான இடமாற்றத் திட்டத்தின்கீழ் இயங்கும் பிரதான ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இடமாற்ற சபைகள் அமைக்கப்படவேண்டுமென நாம் யோசனை தெரிவிக்கின்றோம். அகில இலங்கை தமிழ்ஆசிரியர் சங்கத்தின் இடமாற்ற ஆலோசனைகளையும், வித்தியாதிபதியின்கீழ் இயங்கும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் இடமாற்றத்திலும் அரசாங்க பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் இடமாற்றத்திலும் கவனிக்கப்படலாம்.

### சலுகைகள் இல்லை

2. அரசினர் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் பல சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது உதவி நன்கொடைபெறும பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் எவ்வித சலுகைகளும் பெருது இருக்கிருர்கள். அரசாங்க பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் 1-12-60-க்குப்பின்னர் இரு தடவைகளில் பதவி உயர்வு பெற்றுள்ளனர். ஆனல் வித்தியாதிபதியின் முகாமையின் கீழ்இயங்கும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களும் அரசாங்கம் எடுத்துககொண்ட பாடசாலைகளிலுளள ஆசிரியர்களும் அதிககால சேவையிலிருந்தும் பதவி உயர்வு பெறவில்லை. எல்லாப் பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் வரையில் இது சம்பந்தமான பட்டியல்களை வெவ்வேருக வைத்திருப்பது நல்லதென நாம் கருதுகின்றோம்.

### பாகுபாடு

3. அரசாங்கம்பொறுப்பேற்றுள்ள பாடசாலைகளிலும் வித்தியாதிபதியின் முகாமையின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலும் முதல் கிரேட் இரண்டாவது கிரேட் தலைமை ஆசிரியர் பதவிகளுக்கான ஸ்தானங்கள் காலியாக இருப்பதாக அறிகிறோம். இந்தகாலி ஸ்தானங்களுக்கு எமது சங்கம் அனுப்பியுள்ள பட்டியலிலிருந்து அதிககால சேவையிலுள்ள ஆசிரியர்களை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

### சம்பள உயர்வு தரவும்

4. தாய்மொழியிலேயே ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பு வரை இருப்பதால் தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்கள அறிவு இல்லை என்ற காரணத்தினல் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது நியாயமற்றது. சகல தமிழ் ஆசிரியர்களுக்கும் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

### தலைமை ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம்

5. அரசாங்க சேவைக் கமிஷன் போன்று சுதந்திரமாக இயங்கும் கல்விக் கமிஷன் அலோசனைச் சபைகளுடன் மாவட்டக் காரியாலயங்களின் மத்தியில் விரைவில் அமைக்கப்படல் வேண்டுமென நாம் கருத்து தெரிவிக்க விரும்புகின்ருேம். பாடசாலை நிர்வாகம், ஆசிரியர் நியமனம், இடமாற்றம் அகியவற்றில் தலைமை ஆசிரியர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

### கோவில் காணிகளுக்கு நஷ்டஈடுதரவும்

6. வடபகுதியிலுள்ள பல பாடசாலைகள கோயில் காணிகளைக் குத்தகை எடுத்து அவற்றில் பாடசாலைகளை நடத்தி வந்துள்ளன. இந்தப் பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட வாடகைகள் கோவிலைப் பராமரிக்க பயன்படுத்தப்பட்டன. ஆனல் அரசாங்கம் இந்தப் பாடசாலைகளை எடுத்துககொண்டபின்னர் இந்த வாடகைகளைக கோயல்கள் பெறவில்லை. இதனல் கோயில் பராமரிப்பு வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே காணிகளுக்கான நஷ்ட ஈடாக வாடகைப் பணமாகவோ அல்லது படியாகவோ குறிப்பிட்ட தொகையை இந்தக் கோயில்களுக்கு வழங்கினல் நல்லதாக இருக்குமென நாம் கருதுகிறோம்.’

கல்வி மந்திரி இந்த யோசனைகளுக்கு சமமதம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

---

# சமாதான பேச்சுவார்த்தை

## மாஸ்கோ ஆதரவு

மாஸ்கோ, ஜன 9

உலக கம்யூனிஸத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு கூட்டுப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான ‘பிராவ்டா’ நேற்று யோசனை கூறியது.

சீன, அல்பேனிய கம்யூனிஸ்ட் தத்துவத்தை சோவியத யூனியன உறுதியாக எதிர்த்துக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திலுள்ள கருத்து வேற்றுமையை நீக்குவதற்கு பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் சீன கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் தெரிவித்த யோசனையை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்ததாக கருதப்படுகிறது.

# தபால் இலாகா கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'ஏ' பிரிவு ஆட்டத்தில் தபால் இலாகாக் கோஷ்டி பொலிஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.

'ஏ' பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையேயான இரண்டாவது ஆட்டத்தில் பொலிஸ் கோஷ்டியும் தபால் இலாகாக் கோஷ்டியும் கலந்துகொண்டன. இரு கோஷ்டிகளும் திறமையுடன் ஆரம்பமுதல் இறுதிவரை ஆடியபோதிலும் பொலிஸ் கோஷ்டியினால் ஒரேயொரு கோல்தான் போடமுடிந்தது. தபால் இலாகாக் கோஷ்டி இடைவேளைக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு கோலைப்போட்டு மொத்தத்தில் இருகோல்களைப் பெற்றுக்கொண்டது. பொலிஸ் கோஷ்டி இடைவேளைக்குப் பின் ஒருகோலேனும் போட்டுக்கொள்ளவில்லை.

பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்திற்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மன்னாரில் சினிமா ரசிகர் சங்கம்

மன்னார், செவ்வாய்

சினிமா ரசிகர் சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஜனாப் ஏ. பாறூக் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் புதிய உபகாரியதரிசி, உபதனாதிகாரிகளைத் தெரிவு செய்யவேண்டியதாயிற்று. பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாப் எம். ஏ. சலீல், எம்.ஏ. காதர் ஆகியோரின் இடத்துக்கு ஜனாப் ஏ. எம், ருசீக் உபகாரியதரிசியாகவும் திரு. எஸ். எஸ். அந்தோனிப்பிள்ளை உபதனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கக் கோரிக்கைக்கு இணங்கி பழுதடைந்த மின்சாரக்கம்பங்களை மாற்றி புதியவைகளை நிறுவியதையிட்டு மன்னார் பட்டினசபையாருக்கு நன்றி செலுத்துவதென முடிவு செய்யப்பட்டது. பிறமொழிப் படங்கள் திரையிடுவதற்காக தியேட்டர் நிர்வாகிகளுக்கும் நன்றி கூறுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சங்கத்திற்கு காணிகள் கொடை

கிளிநொச்சி, செவ்வாய்

இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தீர்மானிக்கப்பட்டது. திரு. க. சின்னையா என்பவர் மேற்படி சங்கக் கட்டிடத்திற்கு ஒரு ஏச்கர் நிலம் நன்கொடையாக வழங்கியுள்ளார். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி, இப்பெரியாரை இச்சங்கக்கட்டிடம் நிரந்தரமாக அமைப்பதற்கு காணி உதவ முன்வந்ததை பெரிதும் பாராட்டிப் பேசினர். முன்பு தலைவராக கடமையாற்றிய வண. அ. செ. தம்பிராசா, சங்கத் தலைவர் ஆகியோர் சங்கவளர்ச்சிக்கு உதவிசெய்ய முன்வந்த இவரை மிகவும் பாராட்டிப் பேசினர்.

## பஸ் தடம்புரண்டது

கண்டி, செவ்வாய்

இ. போ. ச. பஸ் ஒன்று செங்குத்தான திருப்பமொன்றில் திரும்புகையில் பாதை விலகியதால் சேதத்துக்குள்ளாகியது. இந்த விபத்தின் காரணமாக பஸ்சாரதியும் ஒன்பது பிரயாணிகளும் காயமுற்றனர்.

காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டுள்ளார்கள். மூன்றுபேருக்கு வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## அரியாலை ச. ச. நிலையம்

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

அரியாலை சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. இ. க. குமரையா தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் வருடாந்த அறிக்கை வாசித்தார். மூன்றுவது நிகழ்ச்சியாகத் தனாதிகாரிதிரு. ம. நவரத்தினம் என்பார்வை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர் திரு. எஸ். தருமலிங்கம், உபதலைவர்கள் திருமதி. ப. மாசிலாமணி, திரு. சு. பாலசுந்தரம். காரியதரிசி; திரு. ந. கிருஷ்ணசிங்கம். உபகாரியதரிசி திரு. எஸ். சதாசிவம்; தனாதிகாரி திரு. த. மயில்வாகனம். உபதனாதிகாரி திரு. த. பரம்சோதி. செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. க. குமாரையா, ச. நடேசர், ச. இராதாதேவ், க. பரமலிங்கம், செ. சண்முகநாதன், ஆ. சண்முகநாதன், செ. அருளம்பலம், பொ. விஜயரத்தினம் ஆகியோரும் போஷகர்கள்: திருவாளர்கள் கே. எஸ். நடராசா, சு. செ. மகாதேவா ஆகியோரும், நிலையப்பொறுப்பாளராக செல்வன் கு. பத்மசுந்தரமும் கணக்குப்பரிசோதகராக திரு. இ.க. சுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மீன்பிடி துறைமுகத்துக்கு மேலும் கனடிய உதவி

கொழும்பு, செவ்வாய்

முகத்துவார மீன்பிடித் துறைமுகத்தை விஸ்தரிப்பு செய்யும் திட்டத்துக்கு கனடிய உதவி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்கு இதுவரை ரூபா 50 கோடி 7 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதற்கு கனடா பெரும்பகுதியான பகுதி உதவி அளித்துள்ளது

இத்துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக விபரங்களடங்கிய திட்டங்களை நிதி அமைச்சு மூலமாக சமர்ப்பிக்குமாறு மீன்பிடி இலாகா கோரப்பட்டுள்ளது.

மீன்பிடி இலாகா கீழ்க்காணும் விபரங்களை சமர்ப்பிக்குமெனத் தெரிகிறது.

ஐஸ்கட்டி தயாரிப்பில் அதிகரிபபு செய்வது. இப்பொழுது நாளொன்றுக்கு தயாரிக்கப்படும் 22 தொன் ஐஸ் தயாரிப்பை 50 தொன்னுக்கு அதிகமாக்குவது.

ஐஸ்கட்டியாக்கும் இடத்தை விஸ்தரிப்பு செய்தல். நாளொன்றுக்கு தற்பொழுது 9 தொன் ஐஸ் தயாரிக்கப்படும் இடத்தை விஸ்தரிப்பு செய்து 27 தொன் ஐஸ் தயாரிக்க ஏற்பாடு செய்தல்.

நாளொன்றுக்கு 100 தொன் மீனைச் சேகரித்து வைக்கக் கூடிய தொட்டி வசதிகள் செய்தல்.

நவீன யந்திர வசதிகளைக கொண்ட மீன்பிடி படகுகளையும் இலாகா கோரியுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வியாழன் 10-1-63

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 எவ். எக்ஸ். ஸி. நடராஜா — பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'வறுமையில் செம்மை' — நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவில், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 டி. சுந்தரராஜன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 டி. சுந்தரராஜன் — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்தியஇசை, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-45 எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர் — ராகம், தானம், பல்லவி, 8-40 திரைப்படஇசை, 9-15 சுபத்த சங்கீதம்.

## இன்ஸ்பெக்டர் மூர்த்திக்கு பிரிவுபசாரம்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சி பொலிஸ் அதிபர் திரு. எஸ். மூர்த்தி அவர்கள் சுன்னாகம் பொலிஸ்நிலையத்துக்கு இடமாற்றமாகிச் செல்வதை முன்னிட்டு அன்னாருக்கு பொதுப் பிரியாவிடை ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பல சமூஸ்தாபனங்களும் தனித்தனி பிரிவுபசாரக்கூட்டம் நடாத்தினார்கள். இடமாற்றலாகிச் செல்லும்திரு. எஸ். வி. மூர்த்தி நேற்று உருத்திரபுரம் காந்தி நிலைய மாணவர்களுக்கு உடைகள் இலவசமாகக் கொண்டு வந்து கொடுத்துச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோதுமை ஆலை விரைவில் நிறுவனமாகும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை சோவியத் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைப்படி இலங்கையில் கோதுமை ஆலை ஒன்று நிறுவுதற்கான ஆரம்ப செலவினங்களுக்காக 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபா மான்யம் கோரும் ஓர் உத்தேச செலவினத் திட்டத்தை உள்நாட்டு அமைச்சர் மைத்திரிபால சேனநாயகா இன்று பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிப்பார் ஆலை நிறுவும் வேலைகள் விரைவில் தொடங்கப்படும். ஆலை நிறுவன வேலைகள் பூர்த்தியாகி ஒன்றரை கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும். ஆரம்பத்தில் வருஷத்துக்கு 50 ஆயிரம் தொன் கோதுமை இங்கு மாவாக்கப்படக் கூடியதாயிருக்கும்.

## வியாபாரக் கல்லூரி

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய டெலிபோன் டைரக்டரியில் நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு வியாபாரக்கல்லூரியெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

நல்லூர் யுனைட்டெட்கிறிஸ்தியன் ரேடிங் கொலேஜ் என்று அந்த டைரக்டரியில் அச்சிடப்பெற்றுள்ளது.


## வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

### ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

#### விளம்பரப் பிரிவுகள்

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெவகுப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைககிள், வானொலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப்படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், பணவசதி, ஈட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ. 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 வீதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 வீதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேறாக அறவிடப்படும்.

தபாற் பெட்டி எண் குறிப்பிட்ட விளம்பரங்களாயின், மேலதிகமாக 6 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க | 3ம் க்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. வீதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4-90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-90 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 6-00 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.

# ‘பொலிஸ் தலையிட்டிருவிட்டால் கைகலப்பு நின்றது!’

## பார்லிமெண்டில் உணவு மந்திரி விளக்கம்

கொழும்பு, புதன்

“கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மத்தியில் பொலிசார் தலையிட்டிருக்காவிட்டால் தேசாபிமானமுள்ள மக்களுக்கும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டிருப்பதைத் தடுத்திருக்க முடியாது போயிருக்கும்” என்று உணவு, வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின நேற்று பார்லிமெண்டில் தனது யாழ்ப்பாண விஜயம்பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

### “மற்றொரு சதிக்கு வழிகோலுகிறது”

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தாக்கப்பட்டதுபற்றி பார்லிமெண்டில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், “பொலிசாரின் இந்தவித நடவடிக்கைகளை அரசாங்கம் சகித்துக்கொண்டிருப்பதன் மூலம் அது மற்றொரு புரட்சிச் சதிக்கு வழிகோலுகிறது. புதிய சதி தோல்வியில் முடிவடையாமலுமிருக்கக்கூடும்” என்று கூறினர்.

### சபை முதல்வர் அறிக்கை சமர்ப்பிப்பார்

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டக்காரரை பொலிசார் தாக்கினர் என்ற குற்றச்சாட்டுபற்றி பூரண விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டு வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை சபையில் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதாக சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா தெரிவித்தார். விசாரணைக் கமிஷன் நியமிப்பதுபற்றி தாம் இப்பொழுது ஏதுவும் சொல்வதற்கில்லையென்றும் அவர் கூறினர்.

ஜனப்பிரதிநிதிகள் சபையின் நேற்றைய கூட்டத்தின் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது யாழ்ப்பாணத்தில் உணவு, வர்த்தக மந்திரியை எதிர்த்துக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள்மீது பொலிசார் தாக்குதல் நடத்தியதுபற்றி வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் மற்றும் எம். பி.க்கள் சிலரும் கண்டனம் தெரிவித்தனர்.

திரு. அமிர்தலிங்கம் பொலிசாரின் நடத்தையை வன்மையாகக் கண்டித்தார். “பொலிசாரின் இச்செய்கை புதிய தொன்றல்ல. இது இப்பொழுது தீவிரமாகப் பரவிவரும் நடத்தை. இது வெறும் பலாத்காரச் செய்கை மட்டுமல்ல. அசல் காடைத்தனம்” என்று திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் மந்திரிக்கு அளித்த வரவேற்புகள் கள்ளக்கடத்தல்காரர்களாலும் ஆலைச் சொந்தக்காரர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டவையென்றார். இந்த வரவேற்புக்களை ஏற்றுக்கொள்வதன்மூலம் வடபகுதியில் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக்கொண்டு தென்னிலங்கையில் அவர்களுக்கு எதிராகப் போராட்டமும் நடத்துகிருர்கள் மந்திரிகள் என்று திரு. சிவசிதம்பரம் கூறினர். பொலிசாரின் புதுமுறைத் தாக்குதல் எம். பி.க்களைத் தெரிவுசெய்து அடிப்பதாக இருக்கிறதென்று அவர் சொன்னர்.

#### உணவு மந்திரி விளக்கம்

இதற்கு முன் உணவு, வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின பேசுகையில் தம்மை யாழ்ப்பாணத்தில் மக்கள் அன்புடனும் உற்சாகத்துடனும் வரவேற்றதாகவும் சிலர் கறுப்புக்கொடி காட்டியதாகவும் கூறினர். பொலிசார் தலையிட்டிருக்காவிட்டால் தேசப்பற்றற்ற மக்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது போயிருக்கும் என்று கூறினர்.

---

# “உதவியளிப்பதை நிறுத்திவிடுவோம்”

## இலங்கைக்கு அமெரிக்கா மிரட்டல்

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள அமெரிக்க எண்ணைக் கம்பனிக்கு நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கைக்கு அளித்துவரும் உதவியை நிறுத்திக்கொள்ளப் போவதாக இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கை அரசாங்கத்தினது பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் உபயோகத்துக்காக இலங்கையிலுள்ள எண்ணெய்க் கம்பனிகளின் நிறுவனங்கள் பலவற்றை அரசாங்கம் சமீபத்தில் தனதாக்கிக்கொண்டது. நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டது சம்பந்தமாக எண்ணெய்க் கம்பனிகள் தங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருந்தன.

நஷ்டஈடு கொடுப்பதுசம்பந்தமாக எண்ணைக் கம்பனிகளின் நிர்வாகிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திவருகிறுது.

அமெரிக்க எண்ணெய்க் கம்பனிக்கு நஷ்ட ஈடு கொடுப்பதுபற்றி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கைக்கு அளித்துவரும் உதவியை மிக விரைவில் நிறுத்திக்கொள்ளப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

---

# தாக்குதல்பற்றி பட்டிருப்பு எம். பி. ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், வியாழன்

பட்டிருப்பு எம். பி.யும் இலங்கை தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்தார். அண்மையில் அமைச்சர்கள் இருவர் இங்கு வந்திருந்தபோது கறுப்புக் கொடிக் காட்டியவர்கள் மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தது பற்றி திரு இராசமாணிக்கம் நேரில் விசாரித்து அறிந்து சென்றுள்ளார்.

வடபகுதியில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட சேதம் பற்றி சம்பந்தபட்ட பிரமுகர்களுடன் தொடர்புகொண்டு நிலைமையை அறிந்து கொண்ட அவர், கிழக்கு மகாணத்தில் வெள்ளப் பெருக்கேற்பட்டிருக்கின்றதென்ற செய்தி கேட்டதும் யாழ்ப்பாணத்தில் மற்றைய விவகாரங்கள் யாவையும் ரத்துச் செய்துவிட்டு நேற்று பிற்பகல் விமானத்தில் பிரயாணமானர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்திற்கு விஜயஞ்செய்ததோடு முக்கிய பிரமுகர்கள் சிலருடனும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுச் சென்றுள்ளார்.

---

# நோயாளி வலிப்பு கண்டு மரணம்

## மருந்து உடனே கிடைக்கவில்லை

சிலாபம், புதன்

காலாகாலத்தில் ஏ. டி. எஸ் மருந்து நோயாளிக்கு கிடைத்திருந்தால் அவரது உயிரைக் காப்பாற்றுவது பெரும்பகுதி சாத்தியமாயிருந்திருக்கும் என்று மாதம்பையைச் சேர்ந்த 15 வயதுச்சிறுவன் ஒருவனின் மரணத்தின் பேரில் அபிப்பிராயம் தெரிவித்த திடீர் மரண விசாரணை அதிகாரி வேர்ணன் பெரேரா கூறினர். பி. டி. சோமரத்தின என்னும் இச் சிறுவன் ஒரு ரணகாயத்துடன் சிலாபம் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சைக்கவசியமான ஏ.டி. எஸ். என்ற மருந்து வைத்தியசாலையில் உடனே கிடைக்கவில்லை. அதற்குப் பதில் வேறுமருந்துகள் கொடுக்கப்பட்டன. ஏ. டி. எஸ். மருந்து கிடைப்பதற்குள்ளாக நோயாளி வலிப்புக் கண்டு மரணமாய்விட்டார்.

---

# 1976 ல்...

சென்னை, ஜன. 9

1976-ம் ஆண்டு தமிழ் நாட்டுக்கு 61,100 கோடி கிலோவாட் மின்சாரம் தேவைப்படுமென ஒரு புள்ளி விபரம் கூறுகிறது.

---

# தர்மபுரம் தட்டுவங்கொட்டி தொடர்புகள் துண்டிப்பு

## படகு வசதிகள் பெறமுயற்சி

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சியில் ஆனையிறவுக்கு அண்மையிலுள்ள தட்டுவங்கொட்டி என்ற இடம் பூராவும் வெள்ளத்தால் சூழ்ந்திருந்தபடியால் பல வீடுகள் வீழ்ந்து அழிந்துவிட்டன. தர்மபுரம் பகுதிக்குச் செல்லமுடியாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. வெள்ளம் இன்னமும் தணிந்தபாடில்லை. இதனல் அப்பகுதித் தொடர்புகள்யாவும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாக அரிசி விநியோகம் செய்வது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யோசித்து வருவதாக கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கடந்தசில தினங்களாகவே இப்பகுதியில் இப்படியான நிலைமை ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தும் வெள்ளப்பகுதியில் சேவையாற்றுவதற்காக படகுகளோ வேறு வசதிகளோ செய்துகொடுக்கப்படவில்லை. நேற்று நண்பகல் வரை இந்நிலைமையில் மாற்றமெதுவும் ஏற்படாமையால் சேதத்துக்குள்ளான பகுதி மக்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளானர்கள்.

கடற்படை, சுங்க இலாகா ஆகியவற்றின் படகுகள் இச் சேவைக்காக கிளிநொச்சிக்கு அனுப்பப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிற்பகல் அரசாங்க அதிபர் காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட்டக்கச்சி என்ற இடத்திலும் வெள்ளச்சேதம் பெரிய

(5-ம் பக்கம் பார்க்க)

---

# திவ்ய ஜீவன திருவெம்பாவை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் கந்தர் மடம் கந்தபுராண மடத்தில் கடந்த பத்து நாட்களாக நடைபெற்றுவந்த திருவெம்பாவை, கடைசி நாளான நேற்று திருவாதிரை தினத்தன்று விசேட பூசையுடன் முடிவடைந்தது. கடந்த பத்து நாட்களும் காலையிலும் மாலையிலும் பூசைகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கத்தின் இளங்கதிர் மன்றத்தினர், அத்தியடி சித்திவிநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை பூசைகளை நடத்தினர்.

---

# எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தில் தீ

நியூயோர்க், ஜன. 9

உலகிலேயே மிக உயரமானதும், நியூயோர்க்கிலுள்ளதுமான “எம்பயர்ஸ்டேட்” கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்து இன்று, வெற்றிகரமாக அணைக்கப்பட்டது. 102 மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தின் 83-வது மாடியில் தீ விபத்து ஏற்பட்டது.

---

சினிமாஸ் திரைகளில் எதிர்பாருங்கள்!

பொங்கல் திரை விருந்து!!

ஜனவரி 11-ந் திகதி வெள்ளிமுதல்

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நப்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகனு
மற்றும் பலர் நடித்த

ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பண்டாரவளை)

டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். ராதா
அஞ்சலிதேவி, ஈ. வி. சரோஜா, ஏ கருணாநிதி
நடித்த

ஆடவந்த தெய்வம்

டைரக்ஷன்: நீலகண்டன்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ரஞ்சன், ராஜ சுலோசனு, எஸ். ஜானகி
மற்றும் பலர் நடித்த

ராஜா மலயசிம்ஹன்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.